பாரத மணி

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்"—பாரதி

ஆசிரியர் : கே. எஸ். வேங்கடரமணி.

மாலை 2	ஞாயிறு 30-4-39 பிரமாதி௵ சித்திரை௴ 17௳	முத்து 5

பொருள் அடக்கம்

விஷயம் — பக்கம்

1. சரியான வழி ... 130
2. குறிப்பு ... 132
3. தென்றல் காற்று ... 134
4. வார நடப்பு ... 136
5. எங்கள் ஊர் (ஸ்ரீ. எஸ். ராஜப்பா) ... 137
6. விமோசனம் (ராவ் சாகேப். கே. சுப்பிரமணியம்) ... 139
7. பழைய கிராமங்கள் நிலை ... 141
8. புத்தக விமர்சனம் (ஸ்ரீ. ஸ௱. சேதுராமன்) ... 143
9. ஜமீந்தார் வரவு (ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார்) ... 145
10. சந்தோஷச் செய்தி (ஸ்ரீ. பெ. நா. அப்புஸ்வாமி பி. ஏ. பி. எல்.) ... 151
11. அணைகடந்த வெள்ளம் (ஸ்ரீ. வி. எஸ். சுப்பையா) ... 153
12. அயல் நாட்டுப் போட்டி ... 155
13. மைசூரில் ஜலவசதி ... 156
14. கிராமம் (ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன்) ... 158
15. கிராம முன்னேற்றம் ... 159

"பாரத மணி" யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள். ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

சரியான காரியம்

சிற்சில சமயம் கண்ணைத் திறந்து நாம் பார்க்கும் போது எத்தகைய கொடிய இருள் நம்மைச் சூழ்ந்திருக்கிறதென்பதை அறிகிறோம். இது உபமானத்திற்காகச் சொல்லப்பட்டதல்ல. நாம் குருடர்களாயிருந்தால் உபமானமாகத்தான் தோன்றும். ஆனால் கண்களைத் திறந்து பார்த்தால் உண்மையில் பொய், புனை சுருட்டு, திருடு, கொலை, கொள்ளை என்ற இருள் பிரதிதினமும் வளர்ந்து நம்மைச் சூழ்ந்து கொண்டதை அறிகிறோம். "கலியுகத்தில் இவ்வளவும் நடக்குமென்று சொன்னார்களே. அது நிஜமாகவே நடப்பதைப் பார்க்க சகிக்க முடியவில்லையே! இதற்கு விமோசனம் இல்லையா?" என்று பல குரல்கள் இன்று கேட்கின்றன. உலகத்தில் நடக்கும் அட்டூழியங்களைப் பார்க்கும் சிலர் 'சரி! கலி முடியப்போகிறது!' என்று சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொள்ளுகிறார்கள். வேறு சிலருக்கு தாங்கள் செய்வது நல்லதா கெட்டதா என்பது தெரியவில்லை. யாரோ சில ஆசாமிகள் கூச்சல் போடுவார்கள். அதை இவர்கள் செய்யவேண்டியது. இவர்கள் குருடர்கள் தானே? கடைசி ரகத்தில் சேர்ந்த மனிதர்கள் உலகக் குழப்பத்தை விரும்புகிறார்கள். குழப்பம் உள்ளமட்டும் அவர்களுக்கு லாபம். ஆகையால் அவர்கள் குழப்பத்தை உண்டாக்கி அதை நீடிக்கச் செய்கிறார்கள். இந்த மூன்று ரகத்தையும் சேர்ந்த மனிதர்கள் உலகத்தில் எங்கும் வியாபித்திருப்பதைப் பார்க்கலாம்.

ஐரோப்பாவை எடுத்துக்கொள்வோம். இன்று ஹிட்லரும் முஸோலினியும் சேர்ந்து கொண்டு செய்யும் கொடுமைகள் சகிக்க முடியாதவைகளாக இருக்கின்றன. அவர்கள் என்னதான் வேண்டுமென்கிறார்கள் என்று பார்க்கப்போனால் குடியேற்ற நாடுகளும் இன்னும் சில அயல் தேசங்களும் அவர்களுக்குத் தேவை என்று தெரியவருகிறது. ஜெர்மனியில் ஜனங்கள் சுகமாயிருப்பதற்காக அயல் தேசங்களின் சுயேச்சைக்கு உலை வைக்கப் பார்க்கிறார்கள். தங்கள் தேச ஜனங்கள் சௌகர்யமாயிருப்பதற்காக பிற ஜனங்களைச் சுரண்ட விரும்புகிறார்கள். ராவண கும்பகர்ணர்களுக்கும் இவர்களுக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா?

சென்றவாரம் ரூஸ்வெல்ட் விடுத்த கோரிகைக்கு ஹிட்லரின் பதில் வெட்ட வெளிச்சமாகத் தெரிந்தது தான். அதாவது குடியேற்ற நாடு வேண்டுமென்று ஹிட்லர் கேட்கிறார். இது சம்பந்தமாக மற்ற நாடுகள் சொல்லப் போகும் பதிலும் தெரிந்தது தான். இதனால் உலகத்தில் எந்த நிமிஷத்திலும் போர் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. கடைசியாக வரும் செய்திகள் தேசங்களில் நடக்கும் போர் முஸ்தீப்பைத் தெரிவிக்கின்றன. போலந்து மிகவும் சீக்கிரமாகப் பட்டாளங்களைச் சேகரிக்கிறது. ஜெர்மனி போலந்தின் மீது சில குற்றங்களைச் சாட்டுகிறது. இந்த குற்றச்சாட்டுகள் வரப் போகும் யுத்தத்துக்கு காரணமாக ஆக வேண்டுமோ?

வரப்போகும் யுத்த இருள் உலகம் முழுவதையும் மூடப்போகிறது. அப்படிப்பட்ட யுத்தம் வந்தால் அதற்குக் காரணம் ஜெர்மனிமட்டும் அல்ல; இதாலிமட்டும் அல்ல. பிரிட்டனும் மற்ற நாடுகளும் கூடத்தான் காரணம். அது எப்படியென்பதை இப்போது பார்ப்போம்.

(1) சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியை நசுக்க பிரிட்டன் செய்த

சூழ்ச்சி விதையின் மரம்தான் நாளை நடக்கப்போகும் யுத்தம். கொடிய மனப்பான்மையை யார் காட்டினாலும் சரி, அதன் பலனை பிறகு அனுபவித்துத்தானே ஆக வேண்டும்!

(2) ஹிட்லரின் எண்ணங்கள் எவ்வளவோ வருஷங்களாகத் தெரிந்திருந்தும், பிரிட்டன் முதலிய நாடுகள் பேசாமடந்தைகளாக இருந்தன. அப்போது அதை எதிர்க்கவோ புத்திமதி சொல்லவோ ஒருவரும் துணியவில்லை. பிரிட்டன் அப்போது கையை அசைத்திருந்தால் ஜெர்மனி இன்னும் இருபது வருஷங்களுக்கு வாயைத் திறந்திராது.

பிரிட்டன் மௌனமாயிருந்ததற்குக் காரணம் என்ன? பிரிட்டனுக்கு வாய் பேச யோக்கியதை இல்லை. ஒரு பெரிய தேசத்தின் மக்களை அடிமையில் ஆழ்த்தி அவர்கள் உழைப்பால் வாழும் பிரிட்டனுக்கு நியாயம் பேச வாய் இருக்கிறதா? ஆனால் ஹிட்லர் அடிமடியில் கைபோட ஆரம்பித்ததும் பிரிட்டன் திடீரென்று விழித்துக்கொண்டதுபோல் யுத்தம் செய்யத் தயார்செய்து கொள்ளுகிறது.

அயல்நாட்டுக் குழப்பத்தை தயவு செய்து கொஞ்சம் மறந்து விடுங்கள். ஏனென்றால் இந்தியாவிலுள்ள குழப்பத்தைக் கவனிக்கவேண்டும். இரண்டு குழப்பங்களையும் கவனித்தால் ஒரே குழப்பமாகப்போய் ஒன்றும் புரியாமல் போய்விடுமல்லவா? வடக்கே ஹிந்து முஸ்லீம் தகராறும், துப்பாக்கிப் பிரயோகமும் ஒரு புறம். ஷியா—சன்னி யுத்தமும் சத்தியாக்கிரஹமும் மற்றொரு புறம். தெற்கே இந்தி எதிர்ப்பு இயக்கம் ஒரு மூலையில்; மாகாணப் பிரிவினை இயக்கம் மற்றொரு மூலையில். இந்த உபத்திரவம் போதாதென்று சமஸ்தானங்களில் சத்தியாக்கிரஹப்போர். இவைகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல காங்கிரஸுக்குள் உள் கலகம், வாக்குவாதங்கள்; கட்சிப்பிரதி கட்சிகள்! இவைகளைப் பார்த்தால் நமது தேசத்தில் எல்லோருக்கும் பயித்திய பிடித்துவிட்டதோ என்று தோன்றுகிறது. டாக்டர் ராஜன் சமீபத்தில் பைத்தியக்காரர்களின் தொகை நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது என்று கூறியதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்!

இந்த அந்தகாரத்திலிருந்து காந்திஜி நம்மை ஈடேற்றுவாரென்றும் சீக்கிரத்தில் ஒளி உண்டாகுமென்றும் எதிர்பார்த்தோம். ஆனால் அவர்கூட தைரியத்தை இழந்துவிட்டதைக் காணும்போது இடி விழுந்ததுபோலிருக்கிறது. ராஜ்கோட்டில் அவர் செய்த தவம் தோற்றுப்போனதை ஒப்புக்கொண்டு அவர் கொடுத்திருக்கும் செய்தி மிகவும் பயங்கரமாயிருக்கிறது. காந்திஜியின் அஹிம்ஸா சக்தி ராஜ்கோட்டில் பலனளிக்காமல் போனதைப் பார்க்கும்போது உலகத்தின் எதிர்காலத்திலும் மனித சமூகத்தின் விமோசனத்திலும் நமக்குள்ள நம்பிக்கை சிதறிப்போய்விட்டது.

ஆனால், நாம் நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. விமோசனம் நமக்கு உண்டென்றால், உலகத்திற்கு உண்டென்றால், அதைக் கொண்டுவர அஹிம்ஸையால் தான் முடியும். எனவே, 'இன்னும் பன்மடங்கு ஊக்கத்துடன் நாம் காந்திஜியுடன் சேர்ந்து அஹிம்ஸைப்போர் செய்யத் தயாராக வேண்டியது அவசியமாகிறது.

ஆனால் நம் பொறுமையைச் சோதிக்காமல் சுலபமான வழியில் இந்தியாவிலும் உலகத்திலும் சமாதானத்தை உண்டாக்க பிரிட்டனுக்கு ஓர் வழி இருக்கிறது.

இந்தியாவுக்கு பிரிட்டன் உடனே சுயேச்சை அளிப்பது தான் எல்லாவற்றிற்கும் மருந்து. அப்போது உண்டாகும் சுயேச்சையான மத்திய அரசாங்கம் உள்நாட்டுக் கலகங்களையும் வகுப்புப் பூசல்களையும் ஒடுக்கி ஒழுங்கை உண்டாக்கும். இப்போது உள்ள அரசாங்கத்தால் தகராறுகள் அதிகம் உண்டாகுமே ஒழிய வேறில்லை. அந்த அரசாங்கத்தால் ஏழ்மையை நீக்கவும் அதனால் வகுப்புவாதத்தை நீக்கவும் முடியும். மொத்தத்தில் இந்தியாவின் விமோசனத்துக்கு மட்டுமல்ல; ஜனநாயகங்களின் நன்மைக்காகவேகூட இந்தியாவுக்கு சுயேச்சை கொடுக்கவேண்டும். 36 கோடி ஜனங்கள் கொண்ட பலம் பொருந்திய சுதந்திர' இந்தியா. பிரிட்டன் பக்கம் இருக்குமானால் ஹிட்லரோ முஸோலினியோ பிரிட்டனைத் தொடமுடியுமா?

குறிப்பு

கிராமத்திற்குப் போ

படித்த வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிப்பதற்கு ஸ்ரீ. வி. வி. கிரி சென்ற வாரம் ஓர் சிறந்த யோசனை சொன்னார். "படித்த இளைஞர்கள் கூடிக்கொண்டு பட்டணத்தில் வேலை அகப்படாமல் திண்டாடுவானேன்? கிராமங்களுக்குப் போங்கள் அங்கே உங்களுக்கு வேலை அகப்படும். இந்த விஷயத்தைத் தெரிந்து கொண்டால்தான் விமோசனம் உண்டு" என்றுசொன்னார். 'கிராமத்துக்குப் போ' என்று வெகு காலமாக பல பெரியோர்கள் கூறி வந்தும் அது ஒருவர் காதிலும் விழவில்லை. மேலும் அப்படிச் சொன்னால் சிலர் கேலிகூட செய்யத்தொடங்கினார்கள். "ஆமாம்! கிராமத்துக்குப் போவதாம். வேறுவேலை இல்லை!" என்று சில 'வக்ர புத்திகள்' பேச ஆரம்பித்தார்கள். இவர்களுக்குப் பதில் சொல்வது போல் ஸ்ரீ. கிரி பேசியிருக்கிறார்.

உண்மையில், சில சந்தேகிகள் கேட்கலாம், "ஐயா! கிராமம் என்கிறீர்களே! கிராமம் தான் பழாய்க்கிடக்கிறதே. அந்தப் பாலைவனத்தில் நாங்கள் என்னசெய்வது?" அதற்குப்பதில் சொல்லுகிறோம். "ஐயா! அது பாழாய்க்கிடக்கிற தென்பதற்காகத்தான் உங்களைப் போகச்சொல்லுகிறது. நன்றாக வேலை செய்து அந்த பூமியை எல்லோரும் வசிக்கும்படி செய்வதற்காகத்தான் உங்களை கிராமத்துக்குப் போகச்சொல்லுகிறது." ஆமாம்; அந்த வேலையை செய்யச் சந்தோஷம் தான். ஆனால் அவ்வேலையில் இளைஞர்களும் வழி காண்பிக்கவேண்டாமா? அவர்கள் இவ்வேலையில் ஈடுபடும்போது வசதிகள் அளிக்க வேண்டாமா?

இந்த நியாயமான கேள்விகளுக்கு ஸ்ரீ. கிரி பதில் சொல்லியிருக்கிறார். படித்த வாலிபர்களுக்கு கிராமவேலையில் பயிற்சி அளிக்க அங்கங்கே பயிற்சிக் கூடங்களை சர்க்கார் ஏற்படுத்த வேண்டும். பயிற்சி முடிந்தபிறகு அவர்களை கிராமங்களில் உபயோகப்படுத்திக் கொள்ள சர்க்காருக்கும் பொது ஜனங்களும் வழிதேடவேண்டும். இளைஞர்கள் கிராமங்களில் கூட்டுறவு ஸொஸைடிகள் ஏற்படுத்தலாம். விவசாயிகளுக்குச் சிறந்த உதவிசெய்யலாம். ஓர் கூட்டுப்பண்ணை ஆரம்பித்து பயிற்சிபெற்ற இளைஞர்களுக்கு அங்கே வேலை அளிக்கலாம்.

இந்த அற்புதமான யோசனைகளை ஸ்ரீ. கிரி ஓர் திட்டமாக வகுத்து சீக்கிரம் அமுலுக்குக் கொண்டுவந்தால் காங்கிரஸ் மந்திரிசபை தன் கடமையைச் செய்ததாகும். ஆனால் சர்க்கார் முயற்சியுடன் பொதுஜன ஒத்துழைப்பும் வேண்டுமல்லவா? கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்துவிட்டு பெண்ணைக்காணோமென்றால்? அந்தமாதிரி, படித்த இளைஞர்கள் "ஐயா! நாங்கள் கிராமத்திற்கு வந்து சுகமாயிருக்கமாட்டோம். பட்டிணத்தில் இருந்துகொண்டு கஷ்டம்தான் படுவோம்" என்று சொன்னால் என்ன செய்வது? ஆகையால் 'கிராமம்' என்றால் பேயோ பிசாசோ என்ற பயத்தை விட்டுவிடவேண்டும்; கிராமத்துக்குப் போனால்தான் க்ஷேமம் என்ற மனப்பான்மையை நமது பட்டதாரிகள் அடைய வேண்டும்.

சகுனிமாமா

மகாபாரதத்தில் வரும் சகுனியைத் தோற்கடிக்க ராஜ்கோட் வீரவாலா பகீரதப் பிரயத்தனம்செய்து வெற்றிபெற்றுவிட்டார். சமஷ்டி நீதிபதி அளித்த தீர்ப்பு உருப்படாமல் போக என்னசெய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து தீர்த்துவிட்டார். வீரவாலா, காந்திஜி ஏழு பெயர்களை சீர்திருத்தக் கமிட்டிக்காக சிபார்சுசெய்து அனுப்பித்தபோது, சிறுபான்மைப் பிரச்னையைக் கிளப்பிவிட்டு பரிஷத் மெஜாரிடியைக் குலைக்க விஷமம் செய்தார். அதற்குப்பிறகு சில சிறுபான்மைத் தலைவர்களை தந்தி அடித்து வரவழைத்து காந்திஜியை எதிர்க்கச் செய்தார். வகுப்புவாதிகளை அவர் தூண்டிவிட்டார். காந்திஜி தியானம் செய்யும் புனித வேளையில் அவர்கள் கலாட்டா செய்யும் அளவுக்கு இது முடிந்துவிட்டது. அதற்குப்பிறகு காந்திஜி பிரேரேபித்த ஏழு பெயர்களில் அநேகமாக எல்லோரும் சமஸ்தானப் பிரஜைகளே அல்ல என்று விதண்டா விவாதம்செய்தார். "சரி நீங்களே கமிட்டி நியமித்துக் கொள்ளுங்கள். ஆனால் அதன் முடிவை நான் நியமித்த கமிட்டி ஆராய்ந்து பார்த்து அபிப்பிராய பேதப்பட்டால், யார் கட்சி நியாயமென்பதை சமஷ்டி நீதிபதி முடிவுகட்டட்டும்" என்றார் மகாத்மா. வீரவாலா தாகூர் சாகேப் சொந்தமாகக் கமிட்டி அமைப்பதை ஒப்புக்கொள்

வதாக வேண்டாவெறுப்பாக ஒத்துக்கொண்டார். ஆனால் மறுபடியும் பரிஷாத் பிரதிநிதிகள் கமிட்டியின் முடிவுகளை ஆராயக்கூடாதாம். சமஷ்டி நீதிபதி உட்கார்ந்திருக்கும் இடத்துக்கிட்டக்கூடப் போகக்கூடாதாம்! காந்திஜி இந்த அநியாயத்தைச் சகிக்க முடியாமல் மனங்கொதித்துப்போனார். "அப்பா! நீதான் ஜெயித்தவனாக இரேன், நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டு கல்கத்தாவுக்குப் புறப்பட்டார். காந்திஜியின் அஹிம்ஸை நெருப்பால் என்ன விளையப் போகிறது என்று ஒருவராலும்கூற முடியாது. ஆனால் சனியனை விலைக்கு வாங்கிக்கொண்ட வீரவாலாவுக்காக நாம் பரிதாபப்படுகிறோம். வீரவாலாவுக்கு பச்சாத்தாபம் காட்டுவதை ஸ்ரீ. வல்லபாய் படேல் ஆக்ஷேபித்தாரானால் அதை வாபீஸ் வாங்கிக் கொள்ளுகிறோம்.

சின்ன புத்தி

துர்ப்பாக்கிய வசமாக நம்மில் பலருக்கு பல சமயங்களில் சின்னபுத்தி இருப்பதைப் பார்க்கும்போது நமக்குவருத்தமாயிருக்கிறது. அந்த புத்தியால் என்னவிளையும் எதில் போய் முடியும் என்பதைக்கூட அவர்கள் சிந்திப்பதில்லை. சரித்திரத்தில் மிகவும் முக்கியமான இந்த சந்தர்ப்பத்தில் காங்கிரஸின் ஒற்றுமையை குலைக்கவும் ராஜ்கோட் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மகாத்மா காந்தியின் பலத்தைக் குறைக்கவும் இந்த முயற்சிகள் கடைசியில் ஒத்தாசை செய்கின்றன. அவ்வளவுதான். பிரபல காங்கிரஸ் தலைவர்கள், பெரிய தியாகிகள், மகா புத்திமான்கள் இத்தகைய சில்லறை விஷயங்களில் இறங்கி ஒருவருக்கொருவர் குழந்தைகள்போல் மல்யுத்தம் செய்வதும் அறிக்கை விடுவதும் தேச நன்மைக்குப் பொருத்தமானதல்ல. தனிப்பட்ட நபர்களின் கௌரவங்களையும் அகௌரவங்களையும்விட காங்கிரஸின் ஒற்றுமை மிகவும் முக்கியமானதென்பதை அவர்கள் அறிந்தார்களானால் இக்கார்யங்கள் செய்யத்துணிய மாட்டார்கள். எப்போது காங்கிரஸ் தலைவரென்று ஒருவரைத் தேர்ந்தெடுத்தாய் விட்டதோ அவர்தான் காங்கிரஸின் ஒப்பற்ற பிரதிநிதியாவார். காங்கிரஸ் தலைவர் செய்யும் கார்யங்களைக் கண்டிக்கவோ ஆதரிக்கவோ அ. இ. கா. க. இருக்கிறது. தனிப்பட்டதலைவர்கள் அறிக்கை வெளியிடும் தான்தோன்றித் தனத்தை விட்டுவிடவேண்டியது அவசியம். கல்கத்தாவில்கூடும் அ. இ. கா. க. தீர்ப்பை எல்லோரும் ஒப்புக்கொண்டு ஒற்றுமையுடன் வேலைசெய்யவேண்டும். அப்படியில்லாமல் தலைவர்கள் இவ்வளவுநாள் நடந்துகொண்டபடி மேலும் செய்தால் பொது ஜனங்கள் அவர்களை மன்னிக்க மாட்டார்கள்.

தமிழுக்கு ஜே!

சிலர் தமிழுக்குத் தொண்டு செய்வதாகக் கிளம்பி தமிழ்க் கொலை நடத்தும் இந்தக் காலத்தில் உண்மையில் யாராவது தமிழ் தொண்டு செய்வதைப் பார்க்கும்போது நாம் பரவசமடைகிறோம். உதாரணமாக, அண்ணாமலை சர்வகலாசாலையார் அடிக்கடி தமிழ் அபிவிருத்திக்காகச் செய்யும் முயற்சிகளை நாம் பாராட்டுகிறோம். மூன்று வருஷங்களுக்கு முன்பாக, இன்டர்மீடியேட் வகுப்புத் தகுந்த ஓர் பிஸிக்ஸ் (Physics) பாட புத்தகத்தை தமிழில் எழுதுபவர்களுக்கு 1000 ரூபாய் பரிசளிப்பதாக விளம்பரம் செய்திருந்தார்கள். முதல் பாரத்திலிருந்து எல்லாம் ஆங்கிலமயமாக இருந்த காலம் மலையேறி காலேஜ் வகுப்புகளுக்குக்கூட தமிழில் விக்ஞான சாஸ்திரத்தைச் சொல்லிக் கொடுக்கும்படியான காலம் வந்ததென்றால் தமிழுக்குச் சுக்கிர தசை பிறந்திருக்கிறதென்றுதான் கூற வேண்டும். இன்னும் சில வருஷங்களில் பி. ஏ., எம். ஏ வகுப்புகளில்கூட தமிழிலேயே எல்லாவற்றையும் போதிப்பார்கள் என்று நம்பலாம்.

ஆனால் இப்போது நாம் சொல்ல வந்த விஷயம் பரிசைப்பற்றி. அந்த பரிசை நமது அன்பர்களில் ஒருவர் அடித்துக் கொண்டு போய் விட்டார்களென்றால் அது சந்தோஷமான செய்தியல்லவா? "பாரதமணி"யின் அன்பரும் கட்டுரையாளருமான ஸ்ரீ. ஆர். கே. விஸ்வநாதன் எம். ஏ அவர்கள் ஸ்ரீ. வி. என். ராமஸ்வாமி பி. எஸ். ஸி. (ஹானர்ஸ்) அவர்களுடன் தயாரித்த புத்தகத்துக்கு கிடைத்தது பரிசு! இதனால் நாம் அடைந்த சந்தோஷத்தை வாசகர்களுக்கு பகிர்ந்தளித்துவிடுகிறோம்.

தென்றல் காற்று

கேளாய் விக்கிரமாதித்தனே, பிராதசிசால னென்கிற அக்கிராரத்திலே சிலோசனனென்கிற பிராமணனுக்கு அறமசுண்டனென்கிற குமாரனுண்டு அவன் நல்ல பிராயத்தில் அவமிருதியாகச் செத்துப்போனன், அவன் தாய் தகப்பன் அவனை எடுத்துப்போய் மசானத்திற் கட்டையடுக்கையில், அங்கேரத்தில் வாமார்த்தன முனியென்னுஞ் சன்னியாசி அவ்வழியாக வந்து அச்சவத்தைக் கண்டு தன்னுடைய பொங்தியை விட்டு அந்த வுடலிலே போகச் சொல்ல அதனுல் அங்கேஞ் செத்துப் போனவன் பழையபடி நித்திரைதெளிங்தாற்போலெழுந்தது கண்டு, தாயுந்தகப்பனும் மற்றுமுள்ள மனிதரும் சந்தோஷத் துடனே வீட்டுக்கழைத்துக் கொண்டு போகையில் அந்தப் பிள்ளை முந்தியழுதான் பின்பு, நகைத்தான். அவனழுததும் நகைத்தது மேதுக்கென்று வேதாளங்கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறுன் தாய் தகப்பன் வளர்த்த சரீரத்தைவிட்டு மறு சென்மத்துக்குப் புகுந்தோ மென்றழுதான். மறுபடியும் விருத்த சரீரத்தைவிட்டு இளமையான சரீரத்திற் புகுந்தோ மென்று நகைத்தானென்பது கேட்டு, வேதாளங் கட்டவிழ்த்துக் கொண்டு பழையபடி யோடி முருங்கமர மேறிக் கொண்டது.

* * *

மேற்படி கதையை எழுதியது நாமல்ல வாதலால் 'கிரிடிக்' குகள் விக்கிரமாதித்த சரித்திரம் எழுதியவர்மீது வழக்குத் தொடரவேண்டும். கமா, முற்றுப்புள்ளி, வல்லின மெல்லினத் தவறு, வார்த்தை அமைப்பு, வாக்கியதோரணை முதலியவற்றுக்கும் நாம் ஜவாப்தாரியல்ல. ஆனல் ஹிந்தி எதிர்ப்புப் பத்திரிகைகள் உடனே இந்தப் பிழைகளையெல்லாம் தங்கள் 'பாஷையுடன்' சேர்த்துக்கொண்டு வழக்கப்போல் தமிழ்சேவை செய்து வரவேண்டுமென்பது வேதாளத்தின் அபிப்பிராயம்.

ஆனல் நவீன விக்கிரமாதித்தன் கதையில் பின் வரும் சம்பவம் காணப்படுகிறது.

கேளாய் விக்கிரமாதித்தனே! தமிழ் நாடு என்ற ஒரு பிரதேசத்திலே ஒரு வியாபாரிக்கு வியாபாரவரி எதிர்ப்பு என்ற ஓர் குமாரனுண்டு. அவன் பிறந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் செத்துப் போனன். அவன் தாய் தகப்பனர் வெகு துக்கத்துடனே எதிர்ப்பு இயக்கத்தை எடுத்துப்போய் மசானத்தில் கட்டை அடுக்கையில், அங்கேரத்தில் சுயமரியாதைக்காரர் என்ற சன்னியாசி அவ்வழியாகவந்து அச்சவத்தைக் கண்டு தன்னுடைய பொங்தியைவிட்டு அந்த வுடலிலே போகச்சொல்ல, அதனுல் வியாபாரவரி எதிர்ப்பு மறுபடியும் நித்திரை தெளிந்தாற்போல் எழுந்தது கண்டு, தாயும் தகப்பனும் மற்றுள்ள மனிதரும் சந்தோஷித்து உடனே வீட்டுக்கழைத்துப் போகையில் அந்தப் பிள்ளை முந்தியழுதான், பின்பு நகைத்தான். அவனழுததும் நகைத்தும் ஏதுக்கென்று வேதாளங் கேட்க விக்கிரமாதித்தன் சொல்லுகிறுன். தாய் தகப்பன் வளர்த்தபடி நாணயமாக இல்லாமல் இனிமேல் 'உச்சுக் குடுமி ஒலிக' என்று கோஷம் செய்ய வேண்டுமே யென்று அழுதான். முன்பு ஆதரவு இல்லாமல் இருந்ததுபோக இப்போது பலம் வந்து விட்டதே என்று நகைத்தான் என்பது கேட்டு, வேதாளங் கட்டவிழ்த்துக் கொண்டு பழையபடி முருங்கமரமேறிக் கொண்டது.

* * *

நவீன விக்கிரமாதித்தன் கதையை கதாசிரியர் உத்தரவில்லாமல் வழக்கம்போல் காபி யடித்து ரகசியமாகப் படம் தயாரிக்கும் சினிமா டைரக்டருக்கு மோஷன் பிக்சர் ஸொஸ்டியார் விசேஷப் பரிசு அளிப்பார்கள். ஆனல் திருடினது தெரியாமல் சாமர்த்தியமாய் மாற்றி படம் பிடிக்கும் டைரக்டருக்குப் பரிசு கிடையாது.

பம்பாயில் கூடப்போகும் சினிமா மகாநாட்டில் சில முக்கியமான தீர்மானங்கள் நிறைவேறப் போகின்றன. அபத்தக் களஞ்சியமான படம் பிடிக்கிறவர்களுக்கு 10,000 ரூபாய் அபராதம் விதிக்க வேண்டும். புராணப்படம் பிடித்து கடவுளை நிந்திப்பவர்களுக்கு லக்ஷம் ரூபாய் அபராதம் போட வேண்டும். ரஸாபாஸமான சினிமாக் கதை எழுதும் ஆசிரியர்களைத் தூக்கிலே போட வேண்டும்—இந்த மூன்று தீர்மானங்களை ஒரு குறிப்பிட்ட பிரதிநிதி கொண்டுவரப் போகிறார்.

* * *

மேற்படி மகாநாடு உருப்பட வேண்டுமானல் அநாமதேய நடிகர்களும் நடிகைகளும் அதற்கு வரவேண்டும். நாக்கில் நரம்பில்லாமல் திட்டக்கூடிய பத்திராசிரியர்களுக்கும் குட்டி ஆசிரியர்களுக்கும் அவசியம் அழைப்பு அனுப்பியாக வேண்டும். இவர்களெல்லாம் அதிஷ்டவசமாக மகாநாட்டுக்கு வந்துவிட்டால் மகாநாடு நிச்சயம் வெற்றியடையும் என்பதில் சந்தேகமில்லை.

* * *

பம்பாயில் போட்டிப் பரிசுகள்மீது வரி போட்டிருக்கிறார்கள். ஏன் சென்னையிலும் அந்த வரி போடவில்லை என்று ஒருவர் வருத்தப்படுகிறார். நாளைக்கு மிஸ்ஸிஸிபி நதி கூவம் ஆற்றுடன் கலக்கும்படி ஏன் ஏற்பாடு செய்யவில்லை என்று வருத்தப்படுவார் போலிருக்கிறது. நடக்கக்கூடாத விஷயத்திற்கு அசடு மாதிரி வருத்தப்பட்டால் நாம் என்ன செய்ய முடியும் ஸ்வாமி!

* * *

தர்பார் வீரவாலா கடைசியில் ஜெயித்து விட்டதாக காந்திஜி ஒப்புக்கொள்கிறார். ஆகவே வீரவாலாவைப் பாராட்டுவதற்காக திவான்கள் ஓர் விருந்து நடத்துவார்கள். அந்த சமயத்தில் வீரவாலா தாகூர் சாகிபுக்கு வேண்டிய சுயேச்சையை அளிப்பார்.

இந்த விருந்தில் கலந்துகொள்ள சில காங்கிரஸ் பிரமுகர்கள் அழைக்கப்படுவார்கள். காங்கிரஸ் தலைவருக்குத் தெரியாமல் எப்படி விருந்து சாப்பிடுவது என்பதைப் பற்றி பிரச்னை கிளம்பும். ஆனல் கல்கத்தாவிலிருந்து வந்த ஓர் செய்தி அவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுக்குமென்று நம்புகிறோம்.

* * *

ஒருவர் கண்ணுக்கும் தெரியாமல் மாய மாய் மறைய ஓர் மூலிகையை ஒருவர் கண்டுபிடித்துவிட்டார் என்பது அந்தச் செய்தி. காங்கிரஸ் பிரமுகர்கள் இந்த மூலிகையை தடவிக்கொண்டு மாயமாய் மறைந்து விருந்து சாப்பிட்டுவிட்டு வந்து விடலாம். வம்பே இல்லை. ஆனல், பாவம்! மறுபடியும் பழைய ஸ்வரூபம் எடுக்க அவர்களால் முடியாது. ஏனென்றால் அதற்கு வேண்டிய மாற்று மூலிகை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லையாம்!

* * *

விருந்துக்குப் போகும் காங்கிரஸ்காரர்கள் மற்ற விஷயங்களைவிட விருந்தில் விசேஷ அபிமானம் வைத்திருப்பதால் அவர்கள் சாச்வதமாகவே மாயமாக இருக்க ஆசைப்படுவார்கள். ஆகையால் மாயமாகவே இருந்து அடிக்கடி விருந்து சாப்பிட்டுக்கொண்டு இருக்கவேண்டு மென்பது தான் நம் பிரார்த்தனை. "ஐயோ! அப்படி எப்போதுமே மாயமாய் போய்விட்டால் யார் அவர்களை விருந்துக்குக் கூப்பிடுவார்கள்" என்று கேட்கலாம். கூப்பிட்டால் தான் போகவேண்டும்போலிருக்கிறது? மேலும், "ஐயா! உங்களை நாங்கள் கூப்பிடவில்லையே. நீங்கள் எங்கேவந்தீர்கள்?" என்று ஒருவரும் இவர்களைக் கேட்கமாட்டார்கள். இவர்களைப் பார்க்க முடிந்தால் தானே கேட்பதற்கு? இத்தகைய தலைவர்கள் மாயமாய்ப்போவதில் ஒரு நஷ்டமுமில்லை. அவர்கள் மனப்பான்மையே மாயமாக இருக்கும்போது அதற்குத் தகுந்தாற்போல் உருவமும் மாயமாய் இருப்பதுதான் தேசத்திற்கு நல்லது.

வார நடப்பு

சுபாஷ் பாபு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்திற்கு, முன்னதாகவே கல்கத்தா வந்து சேர்ந்துவிட்டார். இப்பொழுது வங்காள மாகாண காங்கிரஸ் தேர்தலில் அதிக கவனம் செலுத்திவருகிறாராம். ஜவஹர்லால் நேருவுடன் சுமார் நான்கு மணி நேரம் கலந்து பேசினார். காரியக்கமிட்டி அமைப்பை காந்தியுடன் கலந்துகொண்ட பிறகுதான் செய்யவேண்டும் என்று நிச்சயித்திருக்கிறார். இந்தப் பத்திரிகை உங்கள் கைக்கு வருவதற்குள் தேசநலமாகிற நெற்பயிருக்கு ஊட்டமளிக்க, ஒரு மழை பெய்யும். எப்பேற்பட்ட மழை? சுபாஷ் பாபு ஓர் நீருண்ட மேகம்! காந்திஜி ஓர் குளிர்ந்த காற்று! இந்த காற்று கல்கத்தாவில் பரவி இருக்கும் கரிய நீருண்ட மேகத்தின் மேல் வீசினதால் உண்டான மழை! இம்மழை தேச மக்கள் தாகத்தைத் தீர்க்குமா?

அஹிம்ஸையின் சக்தியை அறியாத ராஜ்கோட் வீரவல்லா ஸீதாப்பிராட்டியின் பாதிவ்ரதத்தை அறியாத ராவணேச்வரன் போல் தவிக்கிறார். காந்திஜி மிக்க சரீர சிரமத்துடனும் மனவருத்தத்துடனும் "ராஜ்கோட்டில் தோல்வியடைந்தேன்" என்று ஒப்புக்கொள்ளுகிறேன் என்று சொல்லி தற்காலிகமாக ராஜ்கோட் சமரச பிரச்னையை காதில் போட்டுக் கொள்ளாமல் இருக்க நிச்சயித்திருக்கிறார். நியாயமான எழு நபர்களை சீர்திருத்தக் கமிட்டிக்கு அனுப்பினால் அந்நபர்களின் பேரில் குறைகூறுவது வீரவல்லாவிற்கு நியாயமாகுமா? தவிர வேறு ஒரு வழியை காந்திஜி காட்டினபிறகும் அதையும் நிராகரிப்பது ராஜ்கோட்தர்பாரின் முறையா? எனவே பரிஷத்துக்கு தன் உபதேசங்களை அளித்துவிட்டு கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தார்.

வங்காள மாகாணத்தில், முனிசிபல் சட்டத்தில் சீர்திருத்த மசோதா கொண்டு வருவதைப்பற்றி மந்திரி சபையில் ஒரு நெருக்கடி உண்டாயிற்று. இந்த மந்திரிகளின் தைரியமான தீர்மானத்தால் அச்சீர்திருத்த மசோதா கொண்டு வருவதைப்பற்றி சிறிது ஆலோசிக்க காலம் அளித்திருக்கிறார் பிரதம மந்திரி. நெருக்கடியும் தீர்ந்தது.

பம்பாய் சட்டசபையில் போட்டிப் பந்தய வரி மசோதா நிறைவேறிவிட்டது.

சென்னை விற்பனை வரி மசோதா செலக்ட் கமிட்டியால் சில முக்கிய மாறுதல்களை பெற்று சட்டசபையில் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது.

அமெரிக்க தலைவர் ரூஸ்வெல்டின் சமரசச் செய்தி ஐரோப்பா முழுவதும் பரவி ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணி இருக்கிறது. முஸோலினிக்கு சர்வாதிகாரி என்று பெயரைக் கொடுத்து, மறுபடியும் அவரையே ரூஸ்வெல்டின் அதிகாரத்திற்குள்ளாக்கினால் அவர் சும்மா விருப்பாரா? ரூஸ்வெல்ட் இஷ்டப்படி "உத்தரவாதம்" கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார். ஒரு மகாநாடு கூட்டுவதும் மூடத்தனமானது என்று தீர்மானித்துவிட்டார். ஹிட்லர் கொடுக்கப் போகும் பதிலும் இதற்கு அப்பனாகத்தான் இருக்கும்.

முஸோலினி பதிலைப்பற்றி ரூஸ்வெல்ட் ஒன்றும் சொல்லவில்லை என்று தெரிகிறது.

ஹிட்லர் பிறந்தினக் கொண்டாட்டம் வெகு அழகாக நடைபெற்றதாம். பிறந்தினக் கொண்டாட்டத்தின்போது வாழ்த்துக் கூறி அனுப்பிய செய்தியில் முஸோலினி ரோம்-பெர்லின் அச்சை ஊர்ஜிதப்படுத்துகிறார்.

ஆக்கிரமிப்பைத் தடுக்க ஏற்படுத்தி இருக்கும் ஆங்கிலோ-பிரஞ்சு கூட்டத்தில் யுகோஸ்லேவியா சேராமலிருக்க 'அச்சுக்காரர்கள்' பாடுபடுகிறார்கள். இருதரத்தாருக்கும் பேச்சு நடந்துக் கொண்டிருக்கிறது.

ரூஸ்வெல்ட் சமரஸ செய்தியை அனுசரித்து ஹிட்லர் அனுப்பிய கேள்விகளுக்கு சில சிறிய நாடுகள், தங்களுக்கு 'அச்சுக்காரரால்' ஒருவிதமான பாதகமும் ஏற்படாது என்று பதில் அனுப்பி இருக்கின்றன.

அந்தமட்டில் சமரஸத்திற்கு வேறொருவர் வந்துவிட்டாரென்று சேம்பர்லின் மகிழ்ச்சியடைகிறார். தேசீய ராணுவ பலத்தை விருத்தி செய்ய உத்தேசித்து ராணுவ சப்ளைக்காக ஒரு தனி இலாகா ஒரு மந்திரியின் கீழ் ஏற்படுத்த நிச்சயித்திருக்கிறார்.

ஸோவியத்துடன் பிரிட்டிஷ் சம்பாஷணைகள் அனேகமாக முடிவுக்கு வந்துவிட்டன. ஆங்கிலோ-ஸோவியத் ஒற்றுமை ஊர்ஜிதமாகும் என்று நம்பப்படுகிறது.

பிரிட்டிஷ் தூது நெவில் ஹெண்டர்ஸன் திரும்பவும் பெர்லினுக்குப் போவதாகத் தெரிகிறது. பெர்லினில் அவர் ஹிட்லருடன் சில முக்கியமான விஷயங்களைப் பற்றி பேசுவார் என்றும் தெரிகிறது.

"எங்கள் ஊர்"

(கம்பதாஸன்)

சேற்றுநீர் தேக்கிய ஏரி;—அதைச்
சேர்ந்துள திலுப்பை தோப்பு;
தூற்றலொ டுவையிற் காற்றும்—உள்
சுகிக்கத் தகுந்த குடிசை
ஏற்றமும் பள்ளமு மான—இடத்
திருக்கு திருபத் திரண்டு.
கூற்றுவன் நாடுசெல் மக்கள்—பலர்
குடியிருக் கின்ற றதிலே.
சுரையோ டவரைக் கொடிகள்—குடில்
சுற்றிப் படர்ந்து மிருக்கும்;
வரை என் தலையே நிமர்த்தி—செலும்
வண்ணமு டைசேவற் கூட்டம்;
நரையுற் றசிலபேர் களங்கே—தலை
நடுங்க இரும்பி டுமோசை
பறைஎனச் செவியினிற் தாக்கும்;—முகம்
பார்த்துநாய் பல்லை இளிக்கும்;
பன்றிக ளுள்ள நிலைபோல்—அங்கு,
பஞ்சை மக் கள்தங் குடும்பம்
இன்றுவ திகின்ற றுனல்,—வேட்கை
ஈட்டியே தாக்கு மகத்தில்.
கொன்றிடு திவரை மிடிநோய்—எனில்
கூறஇ டமுண்டோ? ஆங்கே
புன்நகை காட்டுமுன் பரிதி—இவர்
புட்க ளனைய எழுந்து
கலப்பை, ஏர்,மா டுபிடித்து,—கொண்ட
கழனி தன்னையு மடுத்து,
அலுப்பை அயர்வை வீடுத்து,—ரவி
அமரும் வரையி லுழைத்து,
நலமென பெற்றிடுங் கூலி,—சொல்ல
நாவுமே கூசிடு தந்தோ!

உழுத்த சோ ளக்கூ ழிருகை—தம்
உழைப்பின் பயனாய்ப் பெருவார்.

குளிர்பனி காலத் திரவில்,—இவர்
கோட்டா னனைய விழித்து,

ஒளிக்க முயல்வர் கரத்தால்,—சீறி
ஓடிவருங் காலால் நடுங்கி,

நெளியும் புழுவினைப் போலே—உடல்
நெளிஉர ஆடைய தின்றி

வளிஉடை தன்னையே போத்து—இவர்
வாழ்கிறார் அந்தோ! விலங்காய்.

எண்ணெய் சிகையினிற் பூசார்;—சுகம்
இருக்கின் றதொன்றெனத் தெரியார்;

உண்கூழ் அரைவயிற் காக—தம்,
உடல்பொ ருளாவியை யெல்லாம்

பண்ணைமு தலாளிக் கீந்து,—ஆலை
பட்டக் கரும்புபோ லாகி,

கண்ணீர் விடுக்கையில் கண்டேன்;—ஹா!
கலந்திருந் ததே இரத்தம்!

அறிக்கை

கீழ்கண்ட இடங்களில் ‘பாரத மணி’யை விற்க ஏஜண்டுகள் தேவை. 25 பிரதிகளுக்குக் குறைந்து ஏஜன்ஸி கொடுக்க முடியாது. டிபாஸிட் கட்டக் கூடியவர்களே விண்ணப்பிக்கவும்.

உதகமண்டலம்	திருமயம்
நாகூர்	திருத்துரைப்பூண்டி
விழுப்புரம்	நன்னிலம்
பெங்களூர்	பொள்ளாச்சி
பட்டுக்கோட்டை	கரூர்
மானமதுரை	திருவனந்தபுரம்

மானேஜர்.

—:0:—

சிக்கனம் என்பது சரியான பொருளுக்குச் சரியான விலை கொடுத்து வாங்குவதுதான். சரியான பொருளைத் தெரிந்தெடுப்பதுதான் கஷ்டம். ‘பாரத மணி’ அந்தக் காரியத்தில் உங்களுக்கு உதவி செய்யத் தயாராக இருக்கிறது. ஆகையால், ‘பாரத மணி’யின் விளம்பரங்களைத் தவறாது படிக்கவும்.

—:0:—

விமோசனம்

(ராவ்சாகேப் கே. சுப்பிரமண்யம்)

"நான்தான் முன்னமேயிருந்து சொல்லிக்கொண்டு வருகிறேனே! (1) முதலில் நம் ஊர் ஸ்திதியை எல்லாரும் நன்றாக மனதிலே அறிந்துகொள்ளட்டும் (2) ஆனவரையிலும் மேலே சொன்ன மாதிரி செலவை குறைக்கவேணும். (3) ஒவ்வொரு குடும்பமும் கொஞ்சம் முதல்போட வேணும். ரொம்ப சொல்பமாயிருந்தாலும் சரி. கூட்டுறவு சங்கமாகச் செய்துகொள்ள வேணும். அதற்கு சத்தியமும், நன்னடக்கையுடையவர்களாயுமிருக்கிற நம்மவர்களே அதை நடத்த ஏற்பாடுசெய்யவேணும். அதிலேயிருந்து கடன் கொடுக்கப்படவே கூடாது. (4) நம் ஊரில் மூலப்பொருள்களை என்னென்ன விதமாகச் செய்தால் காசு பண்ணலாம் என்கிற விதங்களைக் காட்டிக்கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்ய வேணும். (5) நஷ்டம் வராமல் நாம் ஏகோபித்து வேலை செய்யவேணும். முன்னுமுன்னலேயே யாதொரு பிரதிபலன் இல்லாமல் ஒவ்வொருவனும் கஷ்டப்பட்டு அந்த சங்கத்தை முன்னுக்கு கொண்டுவர பிரயத்தினப்படவேணும். அது முளைத்துச் செடியாய் மரமாய் காயாய் பழமாகிறவரைக்கும் அதை தொந்திரவு செய்யக்கூடாது. இன்றைக்கு தண்ணீர் ஊத்தினேனே என்று ஒருவன் ஒரு கிளையை ஒடிக்கக்கூடாது. ஒருவன் கொத்திவிட்டேனே என்று இலையைக் கிள்ளக் கூடாது. லாபம் வந்தால்தான் பங்கிட்டுக்கொள்ள வேணும், (6) நமது வீட்டிலே ஒழிஞ்ச வேளையிலே செய்யக்கூடிய தொழிலைக் காட்டிக்கொடுக்கவும், விருத்தி செய்யவும், விளம்பர முறைகளை அனுசரித்து விற்பனை செய்யவும் சர்க்கார் உதவி செய்ய வேணும். (நமக்கு ஆள் பலம், வசதி, சக்தி இப்போது இல்லாததால்) நாமும் கோணல் குறுக்குச் சொல்லாமல் ஒழுங்காக பொது ஜன ஸௌக்கியத்தையும் மேன்மையையும் குறியாக வைத்துக்கொண்டு சத்தியமாய் நடக்கவேணும். (7) ஊரில் ஒருபொது இடம் ஏற்படவேண்டும். அங்கே எல்லாரும் வாரத்திற்கு ஒரு முறையாவது சேர்ந்து விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டும். செல்வ அபிவிர்த்தி செய்யக்கூடிய புஸ்தகங்கள், தெய்வ வழிப்பாட்டுப் புஸ்தகங்கள் கிராம பொது புத்தகசாலைகளிலேவைத்துக்கொண்டு எல்லாரும் படிக்க வேண்டும். பயிர் விஷயங்களைப்பற்றியும், மற்ற தேசங்களிலிருக்கிற முன்னேற்ற முறைப்படி வியவசாயத் தொழிலைப்பற்றியும், மாடு, ஆடு முதலிய ஜந்துக்களை பராமரிக்கிறதைப்பற்றியும், அதிலிருந்து என்னனென்ன லாபம் கிடைக்கலாம் என்பதைப்பற்றியும் புஸ்தகங்கள் நிறைய இருக்கவேண்டும். கொஞ்சம் வைத்திய புஸ்தகங்களும் வேண்டும். உண்மையான தேச சரித்திரங்கள், தத்துவ சாஸ்திரங்கள், கொஞ்சம் கட்டிடங்களைப்பற்றி ...இந்த மாதிரி கிராம அனுகூலம் உள்ள சாஸ்திரங்கள் நிறைய இருக்கவேண்டும். சர்க்காரும், ஊர்லேயும் சுற்றுப் பக்கத்திலிருக்கிற கள்ளுக்கடை, சாராயக்கடைகளை அடியோடே எடுத்துவிட வேண்டும். நாமும் சோம்பேறித்தனமாய் அரட்டை அடித்துக்கொண்டு வீண்காலம் கழிக்காமல், கூடுமானவரையில் உழைக்கவேண்டும். (8) கிராமத்துக்குஅனுகூலமாயிருக்கிற சட்டதிட்டங்களைத் தெளிவான பாஷை

யில், நாம் தெரிந்து கொள்ளும்படியான தோரணையில் நமக்குப் புத்தகங்கள் எழுதி அனுப்பப்படவேண்டும். (9) அந்த அந்த ஊரிலே அவரவர்கள் ஏற்படுத்திக்கொண்ட பஞ்சாயத்தார்களும் இதரர்களும் கலந்து ஆலோசித்து சரியான வழியில் நடக்கிறவரையில் சுதந்திரமாய் விட்டு விடவேண்டும். அப்படி ஏற்படுத்திய அதிகாரி விஷயத்தில் அடிக்கடி குறுக்கிடக்கூடாது. இந்த மாதிரி எல்லாம் செய்யச் செய்யத்தான் மேலே வழிதோன்றும். இதெல்லாம் நடக்குமா என்கிற சந்தேகம் உங்களுக்கு இருக்கிற மாதிரியிருக்கிறது. யாதொரு தடையன்னியில் நடக்கும். நன்ருய் நாமே மனப்பூர்த்தியாய், தெய்வத்திற்கும், சத்தியத்திற்கும் பயந்தும், பொதுஜன நம்பிக்கைக்குக் கிடமாயும் நடந்தோமானுல் அப்படியே நடக்கும். இல்லாமல்போனுல் நம்மகதி அதோகதிதான். 'ஏதோ நம்ம காலம் தள்ளியாயிற்று. எது எப்படியானுலும் போகட்டும், விதி, காலம்' என்று கோணல் தத்துவம் பேசினுல் நமக்குப்பின் வரும் நம்ம சந்ததிகள் நம்மைக் கேவலமாக எண்ணுவார்கள்! இல்லாக் கொடுமையினுலேயும் தரித்திரத்தினுலும் ஜனங்கள் என்ன கதிக்கு வந்திருக்கிருர்கள், வருவார்கள்? கேவலம் வயிற்றுக்காக, சூது, திருட்டு, நம்பிக்கை துரோகம், பொய், புரட்டு எல்லாம் ஏராளமாய் வந்துவிடும். யோக்கியமாயிருக்கிறவன் கூட சக்தியில்லாததால் கடன்காரனை மோசம் செய்து ஓடிவிடுவான். இல்லாமல் போனுல் சன்னியாசியாகவாவது வேஷம் போட்டுக்கொண்டு பிச்சைக்குப் புறப்படுவான். இவ்வளவு கஷ்டம் வந்தபிறகு யோக்கியத்தனம் செய்ய முடியுமா? தரித்திரம் ஜாஸ்தியானுல், எல்லாம் செய்யத் துணியும்! முன் காலத்தில் பஞ்சம் வந்தபோது ஜனங்கள் கேவலமான கஷ்டங்களை அனுபவித்தார்களாம். மானம், மரியாதை இருக்காது. இப்பவே தரித்திரத்தினுல் எவ்வளவு பேர்கள்-பெண்களும் கெட்டுவிட்டார்கள்? சத்தியம் தாழ்கிறது! நான் அப்புறம் சொல்ல'. வேண்டியதில்லை தம்பா!"

"என்ன அசாத்தியமாய் பயமுறுத்துகிறீர்களே?"

"இல்லேடா! இருக்கிறதைச் சொன்னேன். வருகிறதும் இப்படித்தான் என்றும் சொல்லுகிறேன். இந்த மாதிரி தரித்திரத்தினுலும், இன்னும் சில காரணத்தினுலும் கெட்ட குடும்பங்களைப் பார்த்திருக்கிறேன்; பழகியிருக்கிறேன். அவர்களுடைய கஷ்டங்களையும், வழக்கங்களையும் நன்ருக அறிந்திருக்கிறேன். அவர்களாலே தேச ஜனங்களுக்கு எவ்வளவோ கஷ்டம், நஷ்டம். சர்க்காருக்கும் அசாத்திய செலவு. சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ரொம்ப கவலையும் சேதமும். கடைசியிலே சில தேசங்களில் சர்க்கார் ஒரு வழி கண்டுபிடித்து இப்படிக் கெட்டுப் போனவர்களை (ரொம்ப மோசமாயிருந்தவர்களை) அதிலே இருந்து நடத்தி மேன்மைப் படுத்துகிருர்கள். அதை எல்லாம் கூட பார்த்திருக்கிறேன். அப்போ எனக்கென்ன தோணும் தெரியுமா? இந்த மாதிரி நம்ம கிராமத்தார்களையும் செய்தால் நம்ம புண்ணியபூமி பாரத தேசம் எவ்வளவோ மேன்மையான ஸ்தானத்தைப் பெறுமே என்று நினைப்பேன்! இப்போது கிராமமே இல்லாமல் போனுலும், இனிமேல் வளரும் குழந்தைகளையாவது உபயோகமான வழியில் நடத்தினுல் பிறகாவது கிராமங்கள் உன்னத ஸ்தானத்திற்கு வருமா என்று பார்க்கலாம்."

"அந்த மாதிரியே சர்க்கார் இங்கெல்லாம் செய்யப்படாதா?"

"செய்யலாம். சர்க்காரும் கிராமத்திலே செய்யவேண்டுமென்றுதானிருக்கிருர்கள். முதலில் அதற்கு எவ்வளவோ சங்கடங்கள் எல்லாமிருக்கு. சரியான மனிதர்கள் இருக்கவேணும். அவர்களுக்குச் செய்யவேண்டும் என்கிற ஆர்வம் பூர்த்தியாகயிருக்கவேணும்; அவர்களுக்கு வேண்டிய ஆதரவுகள் சர்க்கார் தகருரில்லாமல் கொடுக்கவேணும். இப்போ இருக்கிற சட்டதிட்டங்கள் எல்லாம் கூடிய சிக்கிரத்தில் எவ்வித ஊக்கமும் ஆர்வமுமிருந்த உத்தியோகஸ்தனுயிருந்தா

(142-ம் பக்கம் பார்க்க)

பழைய கிராமங்கள் நிலை

"புராணிகன்"

கல்வி

தென் இந்தியாவில் பல்லவராயர்கள் நாள்முதல் கிராமங்களிலும் நகரங்களிலும், பெரிய கல்லூரிகளும் வித்தியா சாலைகளும் ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வந்தன. அவைகளை பெரும்பாலும் அந்த கிராம வாசிகள் ராஜாக்களினாலும் இதர பிரபுக்களாலும் கொடுக்கப்பட்ட நில மான்யங்களைக்கொண்டு நடத்தி வந்தார்கள். இவை பல்லவ சோழ ராஜாக்களால் ஏற்படுத்தப்பட்ட அக்கிரகாரம் என்று கூறப்படும். பிராமணவாளங்கள் வேதம் ஸ்மிருதி இவைகளைப் படிக்கவும் சொல்லிக் கொடுக்கவும் ஏற்பட்டவைகள். அவைகளையும் வித்யாஸ்தாபனங்கள் என்றே நாம் கூற வேண்டும்.

பழைய நாட்களிலிருந்த கல்லூரிகளில் சிலவற்றையும் அவைகளின் வைபவங்களையும் சுருக்கமாக வர்ணிக்கிறேன்.

காஞ்சிபுரத்தில் பல்லவராயர்கள் நாள் முதல் பெருத்த கல்லூரிகள் இருந்தன. இந்தியாவுக்கு கி. பி. 10-வது நூற்றாண்டில் சின தேசத்து வித்வான் ஹுயூன்திசங் என்பவர் காஞ்சிபுரத்தில் ஒரு "கடிகை" இருந்ததாகக் கூறுகிறார். அப்பர் காஞ்சிபுரத்தை "கரையில்லா கல்வி பொருந்தியது" என்று பாடியிருக்கிறார். ராஜேந்திர சோள நாளைச்சேர்ந்த ஒரு சிலாசாஸனத்தில் காஞ்சியில் ஒரு கோவிலுக்குக் கிழக்கில் "சுற்றுக் கல்லூரி" இருந்ததாகக் கண்டிருக்கிறது. பாரவி, தண்டி முதலிய சமஸ்கிருத கவிகளும், திலக், நாகன், தர்மபாலர், முதலிய பௌத்த வித்வான்களும் காஞ்சியின் வித்வத்தினால் கீர்த்தியடைந்தவர்கள்.

புதுச்சேரிக்கு அருகில் இருக்கும் பாகூர் என்னும் கிராமத்தில் கி. பி. 800 வது நூற்றாண்டில் ஒரு பெருத்த வித்யா ஸ்தாபனமும் அதைச்சேர்ந்த மாணுக்கர்கள் போஜனசாலையும் இருந்தன. அக் கல்லூரியில் ஏராளமான மாணுக்கர்கள் வாசித்தார்கள். அந்த வித்தியா ஸ்தாபனத்திற்கு பல்லவராஜன், நிருபதுங்கவர்மன் அவர்களால் 3 கிராமங்களின் வரி மான்யம் கொடுக்கப்பட்டு நடந்து வந்தது. வேதம், வேதாந்தங்கள், புராணங்கள் நியாயம், தர்மசாஸ்திரங்கள் இவைகள் அப் பள்ளிக்கூடத்தில் போதிக்கப்பட்டன.

சோழ நாளில் எண்ணுயிரம் என்ற கிராமத்தில் 340 மாணுக்கர்கள் அடங்கிய வித்தியா ஸ்தாபனமும் தருந்த போஜன சாலை முதலியனவும் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததாக அறிகிறோம்.

தஞ்சாவூர் பெரியகோவிலுக்கு அருகில் ஒரு வித்தியாஸ்தாபன மிருந்ததாக உக்கல் கிராமத்து சிலாசாஸனம் மூலியமாய் தெரிகிறது.

பல்லவசோழ ராஜாக்கள் அநேக அக்கிரகாரங்கள் ஸ்தாபித்தார்கள். அவை வேதங்கள் சாஸ்திரங்கள் வாசிக்கவும், பிறருக்கு சொல்லிக்கொடுக்கவும் தான் ஏற்பட்டன.

வைத்தியம்

தென் இந்தியாவில் கிராமங்களின் சபைகள் சுகாதார காரியங்களை மிகவும் நன்ருய் கவனித்துவந்தன.

தடாகங்களில் நல்ல குடி தண்ணீர் இருக்க வேண்டுமென்று அவைகளுக்குக் காவல் போட்டும், வண்டல் அழுக்கு முதலியதை அடிக்கடி எடுக்கச் செய்தும் பார்த்து வந்தார்கள்.

கிராமந்தோறும் நல்ல நந்தவனங்கள் ஏற்படுத்தி வந்தார்கள்.

பெருத்த கிராமங்களிலும் நகரங்களிலும், ராஜாக்களாலும், ஜனங்களாலும் ஆதுலசாலைகள் நியமிக்கப்பட்டும், வைத்தியசாலைகளை ஸ்தாபித்து அவர்களுக்கு மான்யம் முதலியவை கொடுத்தும் நடத்தி வரப்பட்டன.

சோழ அரசன் ராஜேந்திர சோழன் நாளில் தஞ்சாவூரில் சுந்தர சோழ விண்ண

கர் என்று பெயருள்ள ஓர் ஆதுல சாலை இருந்ததாகவும் அதில் ஒரு வைத்தியர் நியமிக்கப் பட்டிருந்ததாகவும் ஓர் சிலா சாஸனம் கூறுகிறது.

திருமுக்கூடல் கிராம சிலாசாஸனம் ஒன்று, கோதண்டராம அசுவத்தம்ம பட்டர் என்ற வைத்தியர் ஒருவர் ஆதுல சாலையைக் கவனிக்கவும் ஜனங்களுக்கு மருந்து கொடுக்கவும் நியமிக்கப்பட்டார், என்று கூறுகிறது.

தற்காலம் சைதாப்பேட்டை என்று விளங்கும் ஊருக்கு பழைய நாளில் குன்றத்தூர் என்று பெயர். அது குன்றத்தூர் நாட்டுக்கு தலைமை ஊர். அதில் ஒரு வைத்திய காணி சோழராஜா ஒருவரால் விடப்பட்டு இருந்ததாகவும், குன்றத்தூர் வைத்தியர் குன்றத்தூர் நாடு முழுவதும் சென்று வைத்தியம் செய்து வந்ததாகவும் சிலாசாஸனங்கள் மூலியமாய் தெரிய வருகிறது.

(144-ம் பக்கத் தொடர்ச்சி)

லும், அவனை கொஞ்ச நாளிலேயே சொல் தப்படுத்தி விடுகிறது. அவனும் செக்கு மாடுமாதிரி தன் காலத்தைத் தள்ளிக் கொண்டு போய்விடுகிறான். அதினால்தான் முழுகினாலும், மிதந்தாலும், நாமே நம்ம கதையை முடித்துக் கொள்ளவேணும். என்ன செய்யப் போகிறீர்கள்?''

"எல்லாரும் ஒன்றுகூடி கோவில் மண்டபத்தில் பேசி ஏற்பாடு செய்வோமே. நீங்கள் இல்லாமல் முடியுமா? யார் யார் சேர்வார்கள்? குடியானத் தெரு, கீழத் தொழிலாளரையும் கூப்பிடுவோம். புதுவருஷம் பிறந்து விட்டது. இனிமேலாவது புது வாழ்வு நடத்த பிரயத்னம் பண்ணுவோம்.''

"ரொம்ப நல்லது. அப்படியே ஆகட்டும்'' என்று தாத்தா ஆசீர்வாதம் செய்து விட்டு வீட்டுக்குப் போனார்.

நண்பர்கள் எழுதியனுப்பும் ஆராய்ச்சியுடன் கூடிய கட்டுரைகளும் ரஸமான கதைகளும் பிரசுரத்திற்கு எடுத்துக் கொள்ளப் படும்.

வாராவாரம் "பாரத மணி''யில் வெளியாகும் அனுபந்தங்களுக்கு அனுப்பப்படும் விஷயதானங்கள் புள்ளி விவரங்களுக்கு சரியானவையாகவும் தகுந்த ஆதாரத்துடனும் இருக்க வேண்டும்.

தெளிவாக காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பும் படி நண்பர்கள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

பிரசுரத்திற்காக அனுப்பப்படும் கடிதங்கள் தமிழில் எழுதப் பட வேண்டும். கதை கட்டுரைகள் வேறு மூலங்களிலிருந்து எடுத்து எழுதப்பட்டால் அதைத் தெளிவாக முன்னதாகவே தெரிவித்து விடும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

தமிழரின் அறிவு வளர்ச்சிக்கான எந்த விஷயதானத்தையும் சந்தோஷத்துடன் வரவேற்கிறோம்.

புத்தக விமர்சனம்

(ஸ்ரீ. ஸா. சேதுராமன்)

"என்ன ஸார், புஸ்தகம் அச்சுப்போட்டீர்களே, ஏதாவது செலவாயிற்றா?" என்று தெரியாத்தனமாகக் குசலப்பிரச்னம் செய்தேன்.

"அந்த வயிற்றெரிச்சலைச் சொல்லிக் கொள்ளவேண்டியதில்லை........பதினைந்து காப்பிகள் விற்பனை......இந்த அயோக்கியப் பயல்.....பேபர்லே கன்னாப் பின்னாவென்று 'ரிவ்யூ' எழுதிப்பிட்டான்...... இந்த மடையனுக்கு என்னாங்கணும் தெரியும், விரலை மடக்கிச் சொல்லும்?..." என்று ஸந்தர்தாரையாக வர்ஷிக்க ஆரம்பித்துவிட்டார்.

இம்மாதிரி தற்காலத்தில் உபயோகமற்ற விஷயங்களை அச்சுப்போடுவதும், விமரிசனக்காரர்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்கள் 'கன்னாப் பின்னா'வென்று விமரிசனம் செய்வதும் ஸர்வ ஸகஜமானவைதான்.

உபயோகமற்ற புஸ்தகங்கள் எவ்வளவு உற்பத்தி ஆகின்றனவோ, அதே அளவுக்குத் திராபையான விமரிசனங்களும் வெளிவருகின்றன. தமிழ் விமரிசனக்காரர்களின் போக்கே தனி. ஏதோ நாலு வார்த்தைகள் கிறுக்கி இருக்கும். புஸ்தகத்தைப்பற்றி ஒன்றுமே இராது. கேட்டால் 'ஓய், அதுதான் விமரிசனம்!' என்று வாயை அடக்கி விடுகிறார்கள்.

ஸ்வாமி, நான் சொல்வதைக் கேளுங்கள். ஏழெட்டு பழைய பத்திரிகைகளை வாங்கி 'விமரிசனம்' ஏதாவது இருந்தால் புரட்டிப் பாருங்கள். மனதுக்கு மிகவும் நல்ல ருசிகரமான பொழுது போக்கு.

சில உதாரணங்கள் கொடுக்கிறேன். பல திறப்பட்ட விமரிசனக்காரர்களின் நடையைப் பாருங்கள். சிற்சில விமரிசனக்காரர்கள் எழுதுவது என்னவென்று புரிந்துகொள்ளுவது சிரமமாக இருந்தாலும் பல்லைக் கடித்துக்கொண்டு படிக்கவும்.

'நல்ல பிள்ளை'த்தனமாக எழுதும் விமரிசனங்களை முன்னால் எடுத்துக் கொள்ளலாம். இம்மாதிரி விமரிசனக்காரர்களை யாரும் 'வைய' மாட்டார்கள்; முக்கியமாகப் புஸ்தகம் போட்டவர்கள்.

சுத்த தர்ம மண்டலம்.—இது சுத்த தர்ம மண்டம் என்னும் சித்த மஹா புருஷர் திருக்கூட்டத்தைப்பற்றியும், அதன் நோக்கங்களையும் எடுத்துக் கூறும் புஸ்தகம். எழுதியவர்......; கிடைக்குமிடம்......, விலை......,

கெஜட்டில் அந்த அந்த வருஷங்களில் அச்சிடப் பெற்ற புஸ்தக ஜாபிதாக்கள் வெளிவருவதுண்டு. ஒவ்வொரு புஸ்தகத்துக்கும் மேற்படி விமரிசனத்தைப் போன்ற ஏதாவது குறிப்புகள் இருக்கும். ஆகையால் இம்மாதிரி விமரிசனங்களுக்கு 'கெஜட் விமரிசனம்' என்று பெயர் கொடுத்தால், அது பொருந்தாமற் போகாது.

* * *

கலை, மறுமலர்ச்சி என்றெல்லாம் கனவு காண்பவர்கள்தான் நீளமான விமரிசனம் எழுதுபவர்கள். எழுதும்போது வார்த்தைகளை லாகவமாக உபயோகிப்பார்கள். நான் சொல்லுவது சரியா இல்லையா என்பதைப் பாருங்களேன்.

"உபநிஷதப் பலகணியைத் திறந்துவிட்டு வேதகாலக் காற்று வீசவைத்தார், ஆச்சாரியார். இப்போது தமிழ் மறையில் மூழ்கி இருக்கிறார்..."

என்று ஆரம்பமாகிறது ஓர் விமரிசனம். ஆரம்பிக்கும்போதே ஏதோ ஜிலு ஜிலு என்ற காற்று வீசுவதுபோன்ற உணர்ச்சி உண்டாகின்றதல்லவா?

வேறொரு உதாரணத்தைப் பாருங்கள்.

"...புத்தகத்தை ஜீவிய சரித்திர இலக்கியத்தில் ஒரு சிருஷ்டியாகக் கருத முடியாது. ஸ்ரீ...அதை அவ்வாறு செய்ய முயலவில்லை என்பதையும் நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர் முயன்றிருந்தால் வெகு சுளுவாக இதை ஒரு முதல்தரமான ஜீவிய நூலாகச் செய்திருக்கலாம். ஆனால் அவர் நோக்கம் வேறு. நம் நாட்டின் தற்கால நிலை

யில் தாத்காலிகமாகப் பயன் அளிப்பதற்கே இதை எழுதியிருக்கிறார்..."

என்று நூலாசிரியருக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவதுபோல, வார்த்தைகளை முத்துமுத்தாய் உபயோகித்திருக்கிறார். புத்தகம் எப்படியிருந்தாலும், வெளிவரும் விமரிசனங்கள் இம்மாதிரியே இருந்தால்...!

* * *

சில விமரிசனங்கள் வெளிவருகின்றன. அர்த்தமே பிடிபடாது. கீழ் வருவனவற்றைப் படித்துப் பார்த்துவிட்டு, என்ன புரிந்தது என்று தெரிவியுங்கள் பார்க்கலாம்.!

"இரண்டும் முதல் பார்வைக்கு இரண்டு விதமாக—ஒன்று சாகாவரம் பெற்ற கவிதை புனைந்த ஒரு கவிஞனின் எழுத்துக்களாகவும்; மற்றது பொழுது போக்கையும், சங்கீத வளர்ச்சியையும் நோக்கமாகக் கொண்டு சிறிது போழ்து மகிழ்ச்சியையும் அறிவு வளர்ச்சியையும் தரமுயலும், பத்திரிகையாகவும்—தோன்றினாலும், ஊன்றிப் பார்த்தால் இரண்டும் ஒரே ரகம்தான்.... துரிதத்தில் பிறந்ததானாலும் தெய்வம் என்றால் என்ன என்பது முதல், மூடக் கொள்கைகள் ஈறாக, நானாவித விஷயங்களைப் பற்றிய ஒரு கவிஞனின் அப்பிராயங்கள் முடிவுகள், மதஸ்தாபகர்கள், விஞ்ஞான சாஸ்திரிகள், ஏன்—தெய்வங்கள் வரை இவரது அபிப்பிராயத்தைப் பெறுகின்றனர்..."

இதே ரீதியில் வார்த்தைக் கோவைகள் தான் விமரிசனம் முழுவதும். எல்லோருக்கும் எளிதில் புரியக்கூடிய முறையில் தம் உயர்ந்த கருத்துக்களை எழுதலாமல்லவா? அதுதான் கிடையாது.

மற்றுமொரு மாதிரி. 'விமரிசனம்' என்ற பெயருக்குத் தகுதியில்லாவிட்டாலும், அவர்களைக் கேட்டால் "அப்படித்தான்" என்று சொல்லுவார்கள். தலையும் இராது, வாலும் இராது. திடீரென்று ஏதாவது ஆரம்பிப்பார்கள். திடுதிப்பென்று முடித்துவிடுவார்கள். எலக்டிரிக் ரயில்வண்டியைப் போலத்தான்!

'விமரிசனம்' என்பது இலக்கியமாகக் கப்படவேண்டிய வஸ்து. அதை வெறும் கேலிக் கூத்தாகச் செய்வது உகந்ததல்ல.

"இப்புத்தகத்தின் பெயரை 'தேனீ வளர்ப்பு' என்று போடாமல் எதற்காக 'தேன் ஈ வளர்ப்பு' என்று போட்டிருக்கிறார் என்பதற்குக் காரணம் ஆசிரியர் இப் புத்தகத்தின் மூலம் தேனை ஈயிலிருந்து பிரிக்கச் சொல்லிக் கொடுக்கிறார் என்பதுதான்... இப்புத்தகம் படித்தபின்னர் நாம் மேற்படி நூலாசிரியரிடமே ஒரு தேனீப் பெட்டி ரூ. 3-8-0-க்கு வாங்கி நமது வீட்டில் வைத்தோம். சில தேனீக்களைப் பிடித்தும் அதற்குள் விட்டு வைத்தோம். மறு நாள் காலையில் பெட்டி காலியாக இருந்தது. அன்று தேனெடுக்கப் போன தேனீக்கள் இன்றுவரை திரும்பி வரவில்லை!" என்று இத்துடன் நின்று விடுகிறது விமரிசனம்.

* * *

புத்தகம் அவ்வளவாகச் சிலாக்கியமில்லாவிட்டால், அதை நாஸூக்காகத் தெரிவிக்கும் சிலர் இருக்கிறார்கள். ஊன்றிப் பார்த்தால்தான் அவர்களுடைய உண்மையான கருத்து புலப்படும்.

"...மேற்படி புஸ்தகத்தை அச்சிட்டவர் மிகவும் படித்தவர். ஏராளமான பொருட் செலவினாலும், உழைப்பினாலும் வெளிவந்த புஸ்தகம் இது. நல்ல காகிதத்தில் அழகிய படங்களுடன் திகழ்கிறது. கையில் வைத்துக் கொள்ளுவதற்கு மிகவும் சிறந்த பூஷணமாக இருக்கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது..." என்று வாழைப் பழத்தில் ஊசியைச் சொருகி விடுகிறார் விமரிசனக்காரர்.

கடைசியாக ஒரு வார்த்தை. ஒரு வரையறை ஏற்படுத்திக் கொண்டு, அடிப்படையான சில விமரிசன விதிகளை அநுசரித்தால்தான், 'விமரிசன'த்துக்குத் தமிழிலக்கியத்தில் ஒரு ஸ்தானம் கிடைக்க வழியிருக்கிறது. யார் விமரிசனம் எழுதினாலும், பொதுவான சில விஷயங்கள் இருந்தே யாகவேண்டும்.

ஜமீந்தார் வரவு

(ராவ் பகதூர் பி. சம்பந்த முதலியார்)

இடம் : ஒரு சிறு வீட்டில் ஓர் அறை.

பொட்டியம்மா கைராட்டினம் சுற்றிக்கொண்டிருக்கிறுள்.

கன்னியம்மாள் கறிகாய் நறுக்கிக் கொண்டிருக்கிறுள்.

ஆறு குழந்தைகள் வெவ்வேறு வேலை செய்து கொண்டிருக்கின்றனர்.

ஜமீந்தார் வருகிறுர்.

ஜமீந்தார் : பொட்டியம்மா, சவுக்கியம் தானு?

பொட்டியம்மா : ஆ! ஜமீந்தாரய்யா வா? —வாருங்கள்! வாருங்கள்!—ஐயா, க்ஷேமம் தானு! வீட்டிலே அம்மா—எல்லோரும்—சவுக்கியமா யிருக்கிறுர்களா?

ஜ : ரொம்ப சவுக்கியமா யிருக்கிறுர்கள். நீங்கள் எல்லாம் என்னமா யிருக்கிறீர்கள்?

போ : உங்கள் தயவால் சவுக்கியமா யிருக்கிறேம். தயவு செய்து உட்காருங்கள். இது சின்னவீடு—இருந்தாலும் சுத்தமாய் வைத்திருக்கிறேம். இதோ இங்கு உட்காருங்கள். இந்த இடம் பெருக்கி யிருக்கிறது. கன்னி, ஜமீந்தார் அவர்களுக்கு ஒரு நாற்காலி எடுத்துப் போடு. (அப்படியே செய்ய)

ஜ : (அதன்மீது உட்கார்ந்து கொண்டு) எல்லாம் மிகவும் சுத்தமாயிருப்பதைப் பார்த்து நான் சந்தோஷப்படுகிறேன். உனது புருஷன் கழனி வேலை செய்கிறுனே?

போ : ஆமாம், இரண்டு பிள்ளைகளோடு, பரம்படித்து விதை விதைக்கப் போயிருக்கிறுர்.

ஜ : சந்தோஷம்—மற்றவர்கள், இரண்டு-மூன்று-நான்கு-ஆறு-இவர்கள் எல்லாம் உங்கள் குழந்தைகள் தானே—எல்லோரும் அவரவர்கள் வயதுக்குத் தக்கபடி ஏதாவது வேலை செய்து கொண்டிருப்பதைக் காண சந்தோஷப் படுகிறேன்.

போ. ஆமாம், ஜமீந்தார் அவாள்! இந்த காலத்தில் எல்லோரும் ஏதாவது வேலை செய்தால்தான் குடித்தனம் செய்ய முடியும். என் புருஷனும் நானும் எப்பொழுதும் வேலை செய்து வழக்கப்பட்டிருக்கிறேம்—அப்படியே எங்கள் குழந்தைகளையும் அந்தப் பழக்கத்திற்கு கொண்டு வருகிறேம். கைக் குழந்தைகள் தவிற மற்றவர்கள் ஏதாவது வேலை செய்கிறுர்கள்.

ஜ : அதுதான் சரி. சோம்பேறித்தனமின்றி ஏதாவது சுருசுருப்பாய் வேலை செய்தால், எப்பொழுதும் சுகமாய் வாழலாம்—ஏழைகளாய்ப் போய் பிச்சை யெடுக்க வேண்டி வருமேயென்று பயப்பட வேண்டியதில்லை—என்ன நேரிட்டாலும் — மஹாராஜர்களுடைய பிள்ளைகள்கூட சும்மா இல்லாது ஏதாவது கைத்தொழில் கற்றுக் கொண்டால் மிகவும் நலமா யிருக்கும்.

போ. மஹாராஜர்களுக்கு என்னங்க? அவர்களுக்குத் தான் செல்வம் கையிலிருக்கிறதே. அவர்கள் வேலை செய்வானேன்?

ஜ : பணத்தைச் செலவழிப்பது சுலபம்; சம்பாதிப்பதுதான் கஷ்டம். கையிலிருக்கும் பணம் செலவானபின் மறுபடியும் பணப்பையை நிரப்ப அவர்கள் ஏதாவது வேலை செய்துதானே ஆக வேண்டும்?

போ : அது மெய்தானுங்க. நாங்கள் வேலை செய்ய எங்களுக்குச் சக்தியுமிருக்கிறது; ஊக்கமு மிருக்கிறதென்று நாங்கள் சந்தோஷப்பட வேண்டும். அன்றியும் உங்களைப் போன்ற நல்ல ஜமீந்தார் கீழ் வாழ்கிறேமே என்று அதிக சந்தோஷப்பட வேண்டும்.

ஜ : நல்ல குடித்தனக்காரர்களுக்கு நல்ல ஜமீந்தார்கள் இருக்க வேண்டியது தானே—உங்களுடைய நற்குணத்தைப் பற்றி நான் நெடுநாள் அறிந்திருக்கிறேன்—வாருங்கள் குழந்தைகளே! உங்களுக்காக ஒன்று கொண்டு வந்திருக்கிறேன். (அவர்களுக்கெல்லாம் அப்பங்கள் எடுத்துக் கொடுக்கிறுர்.)

போ: கன்னி, ஜமீந்தாருக்கு வந்தனம் ஏன் சொல்லாதிருக்கிறாய்?

ஜ: இவ்வளவு பெரியவளான பெண் உங்களுக்கு ஒருத்தி இருப்பதாக நான் நினைக்கவில்லை.

போ: எங்களுக்கு இவ்வளவு பெரிய பெண் உண்மையில் கிடையாது. இவள் எங்க ஜாதி பெண் அல்ல. ஆயினும் அவளை எங்கள் சொந்தப் பெண்ணைப் போலவே பாவித்து வருகிறோம்.

ஜ:—உங்கள் பந்து போலும்?

போ: இல்லை ஐயா, எங்கள் பந்து அல்ல.

ஜ: பிறகு யார்?

போ: (ஒருபுறமாக அவரிடம்) அவள் வெளியே போன பிறகு உங்களுக்குத் தெரிவிக்கிறேன் (உரக்க) கன்னி! தொழுவத்திலே யிருக்கிற கன்றுக் குட்டிக்குக் கொஞ்சம் தண்ணீர் குடிப்பி. (பொன்னி போகிறாள்)

ஜ: வாஸ்தவத்தில் நிரம்ப மரியாதை யுடைய அழகிய பெண்ணாகத் தோன்றுகிறாள்.

போ: ஆம் ஐயா! அவள் அழகுக்கேற்ற நற்குண முடையவள். இவள் ஏதோ தூரதேசத்திலிருந்து வந்த பாதேசிப் பெண். இவள் அகஸ்மாத்தாய் இங்கு வந்து சேர்ந்தாள். எங்களுடன் ஒரு வருஷமாக வசித்து வருகிறாள். அதைப் பற்றிய விவரமெல்லாம் அறிய விரும்புவதா யிருந்தால் உங்களுக்குச் சொல்கிறேன்.

ஜ: சொல்லம்மா. அதைக் கேட்க ஆவலா யிருக்கிறேன். முதலில்—எனக்கு சாப்பிடக் கொஞ்சம் மோர் கொண்டு வந்து கொடு.

போ: ஐயோ! அதை நான் முன்பே உங்களுக்கு கொடுக்காததற்காக என்னை மன்னிக்க வேண்டும். மாரி, அடுப்பண்டை போய் ஐயாவுக்கு கொஞ்சம் நல்ல மோராக ஒரு சுத்தமான பாத்திரத்தில் கொண்டுவா. (மாரி உள்ளே போகிறாள்.)

ஜ: உம்—உன் கதையை இனி ஆரம்பியம்மா!

போ: என்னவென்றால்—என் புருஷன் ஒரு நாள் சாயங்காலம் கழனியில் வேலை செய்துவிட்டுத் திரும்பி வரும் பொழுது, ஒரு கட்டை வண்டி கொஞ்சம் தூரத்தில் ஒரு புறமாக குடம் கவிழ்ந்திருப்பதைக் கண்டார். உடனே ஓடிப் போய்ப் பார்க்க, அதன் ஒரு பக்கமாக கரையோரம் மல்லாக்காய்வீழ்ந்த ஒரு கிழவி மிகுந்த காயத்துடன் விழுந்து கிடப்பதையும், அவள் பக்கத்தில் இந்தப் பெண் அழுதுகொண்டு உட்கார்ந்திருப்பதையும் கண்டார்—அதன் பேரில் என் புருஷன் கவிழ்ந்திருந்த வண்டியை சரிப்படுத்தி நிறுத்தி, இவர்களிடம் போய், அந்த அம்மாளை கஷ்டத்துடன் வண்டியில் ஏற்றி, இப்பெண்ணையும் அழைத்துக் கொண்டு எங்கள் வீடு வந்து சேர்ந்தார். உடனே என்னைக் கூப்பிட, அந்த அம்மாளுக்கு தாகத்திற்குக் கொடுத்து உபசரித்தோம். ஆயினும் அவர்கள் இருந்த திரேகஸ்திதியில் அவர்கள் இதற்கப்புறம் பிரயாணம் செய்வது கூடாமையா யிருந்தது. ஆகவே நாங்களிருவரும் யோசனை செய்து வீட்டுக்குள் அவர்களை அழைத்துவந்து படுக்கையில் படுக்க வைத்தோம்; அவர்கள் தலையில் பெரிய காயம் பட்டிருந்தது. வரவர அவர்களுக்கு நோய் அதிகரித்தது; ஒரு வயித்தியரை வரவழைத்துக் காட்டினோம். எங்களால் ஆனமட்டும் சிகிச்சை செய்து பார்த்தோம். ஒன்றும் பிரயோஜனப் படவில்லை. சிக்கிரம் அவர்கள் உயிர்போகும் எனக் கண்டோம். இந்தப் பெண் கன்னி பாபம்! அவளுடைய பாட்டியைவிட்டு இரவும் பகலும் பிரியாதிருந்தாள். அவள் அச்சமயம் அழுததைக் கேட்டிருப்பீராயின் உங்கள் மனது கரைந்திருக்கும். இவளுக்கு அந்தப் பாட்டியைத் தவிற வேறு இவ்வுலகில் ஒருவருமில்லை என்றாள்; அந்தப் பாட்டியும் போய் விட்டால் தன் கதி என்னவாகுமென்று கதறினாள். கன்னியின் தாய் தகப்பன்மார் காலமாய் விட்டார்களாம். பிறகு தன் பாட்டியுடன் அந்தம்மாளுடைய பிறந்த ஊருக்கு வடக்கே போய், யாராவது தங்கள் பந்துக்கள் இருக்கிறார்களா என்று விசாரித்தறிந்து அவர்கள் சொல்ப சம்சாரம் பண்ணலாம்

என்று புறப்பட்டார்களாம்—பிறகு, கதையைச் சுருக்கிச் சொல்லுமிடத்து, கொஞ்ச நாட்களுக்குள் அந்த அம்மாள் இறந்து போனார்கள். அவர்களிட மிருந்த கொஞ்சம் பணம் வயித்தியச் செலவிற்கும் சமாதி வைப்பதற்கும் சரியாகப் போச்சுது. கன்னி மிகவும் துயரத்தில் ஆழ்ந்திருந்தாள். அவள் பாட்டியின் சமாதியை விட்டுப் பிரிப்பதே எங்களுக்குக் கஷ்டமாகப் போயிற்று.கையைப் பிசைந்துகொண்டு கோவென்று கதறியழுதாள்—இந்தக் கதையை யெல்லாம் சொல்லி உங்கள் பொழுதைப் போக்குகிறேன்.

ஜ: இல்லை இல்லை! இந்தக் கதையை முற்றிலும் கேட்க மிகவும் ஆவலாயிருக்கிறேன்.

போ: எங்களால் — ஆனமட்டும் சமாதானம் சொல்லிப் பார்த்தோம். இவள் 'என்கதி யென்னவாவது? நான் எங்கே போவது? என்னை யார் காப்பாற்றப் போகிறார்கள்!' என்று அழுது கொண்டே யிருந்தாள். இதைக் கேட்டு நான் என் புருஷனிடம் 'ஐயோ பாவம்! இவள் கதியைக் காண என் மனம் தாளவில்லை. இவள் நம்மைவிட ஏதோ அந்தஸ்தில் வாழ்ந்து வந்தவளாகக் காணப்பட்ட போதிலும், ஒரு வேளை நம்முடன் வசிக்க விரும்பினாலும் விரும்பக்கூடும். இவளைத் தனியாக விட்டால் இவள் இப்பாழுலகில் எப்படி வாழப் போகிறாள்?' என்று சொல்ல அவரும் அவளைக் கேட்டுப்பார் என்றார். இதைப் பற்றி சொன்னவுடன் அவள் முகம் வருத்த மெல்லாம் போய் மாறியது! "அப்பா, உங்களுடனே என் வாழ்நாட்களைக் கழிப்பதைத் தவிற நான் வேறொன்றும் விரும்பவில்லை. உங்களுக்கு உதவியாக வேலை செய்ய ஒன்றும் தெரியாமல் போனாலும் சீக்கிரம் கற்றுக் கொண்டு உங்களுக்கு வேலைசெய்து வருகிறேன்" என்றாள். அதற்கு நான் "உனக் கிஷ்டமான வேலையைச் செய். நாங்கள் உன்னை ஒன்றும் கட்டாயப் படுத்தவில்லை. நீ உனக்கிஷ்ட மிருக்கும் வரையில் எங்களுடனேயே யிருந்து நாங்கள் சீப்பிடும் உணவை நீயும் சாப்பிட்டு, வாழ்ந்து கொண்டிரு" என்று பதில் கூறினேன். பிறகு அவள் எங்களுடனேயே வாழ்ந்து வந்தாள். சீக்கிரம் நாங்கள் செய்யும் வேலை யெல்லாம் மிகவும் விரைவில் சுருசுருப்பாய்க் கற்றுக் கொண்டு எங்களுக்கு மிகவும் ஒத்தாசையா யிருக்கிறாள்; எனக்கு எல்லோரையும்விட இவள்தான் மிகவும் உதவி புரிகிறாள்; மிகுந்த பொறுமை சாலி; நற்குண முடையவள். எங்கள் மீதும் எங்கள் குழந்தைகள் மீதும் மிகவும் அன்பாயிருக்கிறாள். ஆகவே நானும் அவளை என் பெண்ணைப் போலவே பாவித்து வருகிறேன். பால்யத்தில் அவள் நல்ல ஸ்திதியில் கொண்டு வரப் பட்டவளா யிருக்க வேண்டும். இவளுக்கு எழுதப்படிக்கத்தெரியும்; தையல் வேலையும் செய்கிறாள் எங்களைவிட நன்றாக—வீட்டு வேலை யெல்லாம் முடிந்த பிறகு எங்கள் சின்ன குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாள். இதுதான் எங்கள் கன்னியின் கதை.

ஜ: பொட்டியம்மா! இதை யெல்லாம் எனக்குத் தெரிவித்ததற்காக உனக்கு வந்தனம் செய்கிறேன். கன்னியின் நற்குணத்தையும் அறிந்தேன். உன் அருங்குணத்தையும் மெச்சினேன்-உம் -இவள் தகப்பனர் யாராம்? தெரியுமா?

போ: தெரியும்—என்னமோ சொன்னளே? யோசித்துப் பார்க்கிறேன்-ஆம்! பலபத்திரர்.

ஜ: பலபத்திரர்! — அந்தப் பெயர் கொண்ட ஒருவர் எனக்குத் தெரிந்தவர் இருந்தார்!—இவளுடன் நான் சற்று பேச விரும்புகிறேன்.

போ: ஆனல் அவளை உள்ளே அழைக்கிறேன்...கன்னி!

க: (உள்ளிருந்து) ஏன் அம்மா!

ஜ: இங்கே வா அம்மா! (வருகிறாள்) அம்மா குழந்தை, உன் விருத்தாந்தத்தை யெல்லாம் அவளுடன் கேட்டேன். நீ தாய் தந்தையர் இல்லாத ஒரு அனதை யென்றறிகிறேன்.

க: ஆமாம் ஐயா:, நான் ஒரு—அனதைப் பெண்.

ஜ: உன் தகப்பனார் பெயர் பலபத்திரரா?

க: ஆமாம்.

ஜ: உன் தாய் தந்தையர் எங்கே வசித்தார்கள்?

க: பட்டணத்தில் ஐயா. அவர்களிருவரும் நான் சிறு குழந்தையாயிருக்கும்பொழுது இறந்து போனார்கள்; அதன் பேரில்தான் திருவாப்பூரில் என் பாட்டியார் வீடு போய்ச் சேர்ந்தேன்.

ஜ: அந்தம்மாள் என்ன உன் தகப்பனாரைப் பெற்ற பாட்டியா? நான் இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்பதற்காக மன்னிக்க வேண்டும்—நான் ஒரு காரணமாக இவைகளையெல்லாம் கேட்கிறேன்.

க: ஆமாங்க. அவர்கள் அனேக வருஷங்களாக விதைவையாயிருந்தார்கள்.

ஜ: அந்தம்மாளுடைய பெயர் என்ன தெரியுமா உனக்கு?

க: பர்வதம்மாள் என்று அவர்கள் பெயர், ஐயா.

ஜ: பர்வதம்மாள்!—இந்த துக்ககரமான கட்டை வண்டி விபத்து நேரிட்ட பொழுது நீங்கள் எங்கே போய்க் கொண்டிருந்தீர்கள்?

க: வானகரத்தின் பக்கத்திலுள்ள அடையாளம் பேட்டுக்கு — அங்கேதான் என் பாட்டியார் பிறந்தார்களாம்.

ஜ: ஓ! அவர்கள் தான்!—எல்லா சந்தர்ப்பங்களும் ஒத்திருக்கின்றன. அம்மா கன்னி, நீ அறியாதபடி உனக்கு ஒரு பந்து கிடைக்கப் பெற்றாய். நான் தான் அந்த பந்து. என்னுடைய தாயாரும் வானகத்தில் பிறந்தவர்களே. அவர்களுக்கு பர்வதம்மாள் என்று மாற்றாந் தாய் வயிற்று சகோதரி ஒரு அம்மா இருந்தார்கள். நீ பிறந்ததைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். உன் தகப்பனார் இறந்ததும் எனக்கு ஞாபகமிருக்கிறது. அவர் சித்திரம் வரைவதில் மிகவும் செட்டிக்காரராயிருந்தார். உன் தாயாரும் சீக்கிரத்தில் அத்துயர் ஆற்றாது மடிந்தது எனக்கு ஞாபகமிருக்கிறது. அவர்கள் இறந்தபொழுது எத்தனை குழந்தைகளை விட்டுச் சென்றார் என்று எனக்குத் தெரியாது. உன் கதியும் என்ன வாயிற்றோ என்று நான் அறியேன். ஆயினும் இப்பொழுதாவது இப்படி ஆச்சரியகரமாய் உன்னை நான் கண்டு பிடித்தேனே என்று மிகவும் சந்தோஷப்படுகிறேன். நீ என்னுடன் வந்து என் வீட்டில் வாழவேண்டும். என் பெண்சாதியும் பெண்களும் இவ்வளவு நற்குணமும் நன்னடத்தையும் உடைய உன்னை சந்தோஷத்துடன் வரவேற்பார்கள்.

க: ஐயா, நீங்கள் என்னிடம் காட்டும் அன்பிற்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆயினும் பணக்காரராகிய உங்கள் குடும்பத்தில் ஏழையான நான் எப்படி வாழ்வது?

ஜ: அதெல்லாம் ஒன்றும் கஷ்டமில்லை. ஏழைகளாகிய சுற்றத்தவரை இகழ்ச்சியாக மதிக்கும் குடும்பமல்ல என் குடும்பம். அன்றியும் உனது பேச்சும் நடவடிக்கையும் நீ தகுந்த அந்தஸ்தில் கொண்டு வரப் பட்டிருக்கிறாய் என்று தெரிவிக்கின்றன.

க: இறந்துபோன என் பாட்டியார் தன்னால் கூடியமட்டும் எனக்கு கல்வி கற்பித்தார்கள். அவர்கள் உதாரணத்தைக் கொண்டும் அவர்கள் கற்பித்ததைக் கொண்டும் நான் பலன் அடையாவிட்டால், அது என் குற்றமாகும்.

ஜ: மிகவும் தக்கபடி பேசுகிறாய். உன் பேச்சைக் கேட்கக் கேட்க உன்மீது பிரீதி எனக்கு அதிகமாய் உண்டாகிறது. சரி, என்னுடன் புறப்பட்டு என் வீட்டுக்குப்போக ஏற்பாடு செய். உனக்கு இவ்வளவு அன்பு பாராட்டிய இவர்களுக்குத் தக்கபடி பிரதி செய்ய ஏற்பாடு செய்கிறேன்.

போ: கன்னியம்மா, உனக்கு வாய்த்த அதிர்ஷ்டத்திற்காக நாங்கள் சந்தோஷப் படுகிறோம். ஆயினும் உன்னை விட்டுப் பிரிய வேண்டுமேயென்று தான் எங்களுக்கெல்லாம் துக்கமாயிருக்கிறது.

க: என்னைத் தாய் தந்தையர்களைப்போல் வளர்த்த உங்களை விட்டுப் பிரிவதென்றால் எனக்கும் வருத்தமாகத் தானிருக்கிறது. ஒரு ஆதரவு மில்லாத அனாதையாய் நான் இருந்தபொழுது என்னை உங்கள் குழந்தைகளில் ஒருத்தியாக

பாதுகாத்தீர்கள். உங்களுக்கு நான் என்றும் நன்றியறித லுடையவளா யிருக்க வேண்டும்.

(ஞானசுந்தரமும் தம்பியப்பனும் வருகிறார்கள்)

ஞா: ஆஹா! ஜமீந்தார் அவர்கள் வந்திருக்கிறார்களா இங்கு?

ஜ: ஆமப்பா, ஞானம். நான் இன்று இங்கு வந்ததற்கு நல்ல பயன் கிடைத்தது.

ஞா: அது என்ன பயன்?

ஜ: என்னுடைய பந்துவைக் கண்டு பிடித்தேன். அப்பா நீங்கள் அன்போடு பாதுகாத்து வந்த இச்சிறு பெண் என் உறவு!

ஞா: யார்?—நம்முடைய கன்னியா?

த: கன்னியா?

ஜ: ஆம்! வாஸ்தவத்தில் அவளுக்கும் அவளது பாட்டியாருக்கும் நீங்கள் செய்த உதவிக்கெல்லாம் உங்களுக்கு வந்தனம் அளித்தபின் நான் இவளை என் மனைவி மக்களுடன் வாழ அழைத்துக் கொண்டு போகலாமென்றிருக்கிறேன்.

ஞா: இது ஆச்சரியமான சமாசாரமே! சரி கன்னி! நீ பணக்காரர் வீட்டில் போய் வாழ வேண்டி வந்திருக்கிறதேயென்று நாங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறோம்—உன் நற்குணத்திற்கு அது பொருந்தியதாகும். ஆயினும் நீ இங்கு இனி இருக்க முடியாது என்பதை நினைக்கும் பொழுது எங்களுக்கெல்லாம் வருத்தமாகத்தா னிருக்கிறது.

போ: அதைத் தான் நானும் சொல்லிக் கொண்டிருந்தேன்.

த: (ஒரு புறமாய் கன்னியிடம்) என்ன! —கன்னி! எங்களை விட்டுப் பிரிய வா போகிறாய்? நாம் இருவரும் பிரிய வேண்டுமோ?

க: (ஒருபுறமாக அவனிடம்) நான் என்ன செய்யக் கூடும்? எனக்கும் வருத்தமாகத்தா னிருக்கிறது.

ஜ: இங்கு விட்டுப் போவதென்றால் ஒருவருக்குமேல் வருத்தமாக யிருக்கிறாப் போலிருக்கிறதே!

போ: ஆமாம் ஐயா, அப்படித்தான் நானும் நினைக்கிறேன்; நாங்கள் எல்லாம் இங்கு இது வரையில் சுகமாய் வாழ்ந்து வந்தோம்.

த: (கன்னியிடம்) நான் மட்டும் உன்னை விட்டுப் பிரிய வேண்டியதுதான்—ஆயினும் கன்னி! என்னை நீ மறக்க மாட்டாயே?

க: (அவனிடம் ஒருபுறமாக) என் துக்கத்தை அதிகப் படுத்தாதீர்கள்! (கண்ணைத் துடைத்துக் கொண்டு) உங்களை மறப்பதாவது? ஒருக்காலும் மறக்கவே மாட்டேன்.

ஜ: ஓகோ! இவர்கள் இரண்டு பேர்களுக்குள் ஏதோ அன்யோன்யம் இருக்கும் போலிருக்கிறது. அதை வெளிப்படையாகச் சொல்லலாமே பொட்டியம்மா! தாராளமாகச் சொல் நீ தான்.

போ: ஐயா! எங்களுக்கு கன்னி அம்மாள் உங்கள் பந்து என்பது தெரியாமலிருந்தது. ஆகவே தம்பியப்பனும் பொன்னி அம்மாளும் ஒருவர் மீதொருவர் காதல்கொண்டு மணக்க விரும்பியபோது, நாங்கள் அதற்கு ஆட்சேபனை சொல்லவில்லை; கொஞ்சம் பணம் சேர்ந்தவுடன் கொஞ்சம் நிலம் வாங்கி அதைக் கொண்டு அவர்கள் சம்சாரம் செய்ய ஏற்பாடு செய்யலாமென்றிருந்தோம்.

ஞா: அதெல்லாம் இப்பொழுது முடியாது.

த: ஏன் அப்பா?

ஞா: ஜமீன்தாருடைய உறவாகிய பெண்ணை நீ கலியாணம் செய்து கொள்ள நினைக்கலாமா?

ஜ: கன்னி வா! உன் அபிப்பிராயம் என்ன? நீ தான் இவ்விஷயத்தைத் தீர்மானம் செய்ய வேண்டும்.

க: ஐயா! நான் ஒரு அனாதையான ஏழையென்று எண்ணியபொழுது இவர் என்மீது மிகவும் அன்பு பாராட்டினார். அவர் அப்படிச் செய்தது என் அதிர்ஷ்டமென்று நானும் எண்ணினேன். அவர் என் காதலைப் பெற்றார். அதினின்றும் நான் என்ன சந்தர்ப்பங்கள் மாறின போதிலும் மாறமாட்டேன். அது எப்படியா யிருந்தாலும் அவரைத் தான் மணம் புரிய வேண்டு மென்பது என் தீர்மானம்.

த: கன்னி! நீயே உத்தமி.

ஜ: கன்னி! நன்றாய்ச் சொன்னாய். இப்படிப்பட்ட தைரியசாலியான பெண் என் பந்துவா யிருப்பது எனக்கு மிகவும் சந்தோஷத்தைத் தருகிறது. நீங்கள் இருவரும் மணக்க என் மனப்பூர்வமாய் உத்திரவளிக்கிறேன். அன்றியும் உனக்குத் தக்க ஸ்ரீதனமும் ஏற்பாடு செய்கிறேன் நீங்களிருவரும் சுகமாய் வாழ்!

போ: ஜமீந்தார் அவர்களே ஸ்வாமி ரட்சிப்பாராக!—கன்னியை விட்டுப் பிரிந்தால் என் பிள்ளையின் ஹிருதயம் துயரத்தால் வெடித்துப் போயிருக்குமென நான் அறிவேன். கன்னி! தீர்க்க சுமங்கலியாய் வாழ்வாயாக!

ஜ: என்னிடம் இரண்டுகாணி நிலம் தற்காலம் பயிரிடப்படாம லிருக்கிறது; அதை உன் பிள்ளைக்குக் கொடுக்கிறேன். அதைப் பயிரிட வேண்டிய மாடுகள் கலப்பை முதலியவைகளையெல்லாம் நான் கன்னிக்குக் கொடுக்கும் ஸ்ரீதனப் பணத்தைக் கொண்டு வாங்கிக் கொள்ளட்டும்.

த: ஜமீந்தார் அவர்களுக்கு என் நமஸ்காரம்.

ஞா: எங்கள் எல்லோருக்காக நானும் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன்.

க: ஐயா, இவ்வளவு தூரம் எங்கள் மனதைத் திருப்தி செய்ததால் இன்னொரு விஷயத்திலும் என் வேண்டுகோளுக்கு இணங்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்; நான் உங்கள் வீட்டிற்குப் போய் அங்கிருப்பவர்களுக்கெல்லாம் என் மரியாதையை செலுத்தி விட்டு இங்கு திரும்பிவர விரும்புகிறேன். இதுவரையில் நான் வாழ்ந்து வந்தபடியே நான் வாழ்வேன். இங்கேயே எனக்கறிமுகமானவர்களுடன்—என்மாமனார் மாமியாருடன்—இவ்வூரிலேயே வாழ விரும்புகிறேன்.

ஜ: கன்னி! நீ கேட்பது மிகவும் நியாயமானதும் பொருத்தமானதுமா யிருப்பதால் அதை மறுக்க எனக்கு மனம் வரவில்லை. ஆயினும் நீ எங்களவர்களையெல்லாம் நன்றாய் அறியவேண்டும். அப்படிச் செய்வது எனக்கு மிகுந்த சந்தோஷத்தைத் தரும்.

க: ஐயா, உங்கள் வார்த்தைக்கு எப்பொழுதும் இரண்டு சொல்ல மாட்டேன், அப்படியே ஆகட்டும்.

ஜ: ஆனால் தம்பியப்பா, உன்னை எங்கள் வீட்டிற்கு மத்யானம் அழைத்துக் கொண்டு வரட்டும். அங்கு உன் உறவினர்களுக்கெல்லாம் உன்னைத் தெரியப் படுத்துகிறேன்—பிறகு எல்லாம்கலந்து பேசுவோம். நான் வருகிறேன் அம்மா-எல்லோரிடமிருந்தும் உத்திரவு பெற்றுக் கொள்கிறேன். (போகிறார்) (மற்றவர்கள்) நமஸ்காரம்!

போ: கன்னி! உன்னை இனிமேல் நான் மருமகளே என்று கூப்பிடலாமல்லவா? நீ எனக்குண்டாக்கின சந்தோஷத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!

த: எனக்குண்டான சந்தோஷத்திற்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்!

க: நீங்கள் எனக்கு செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்!

ஞா: ஹா! குடைகவிழ்ந்த கட்டைவண்டியைச் சரிப்படுத்த நான் சென்ற பொழுது அதன் மூலமாக எங்களுக்கெல்லாம் இவ்வளவு நன்மைக்கு அது வழி காட்டும் என்று நான் எள்ளளவும் நினைத்ததில்லை.

போ: பிறருக்கு நாம் செய்யும் உபகாரம் ஒரு பொழுதும் வீண் போகாதென்கிறார்களே!

க: நீங்கள் எனக்குச் செய்த உபகாரம் வீண் போகவில்லை யென்று ரூபிப்பதே என் ஆயுள்பர்யந்தம் என் கடமையாகும்.

(முடிகிறது.)

சந்தோஷச் செய்தி

(ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி பி.ஏ., பி.எல்.)

தர்ம புத்திரர் அஸ்தினபுரத்தில் அரசாட்சி செய்து வந்தபோது அவருடைய தம்பியாகிய பீமசேன மகாராஜனை அந் நகரத்திலே நியாயாதிபதியாக நியமித்திருந்தார். அப்போது ஒரு சமயத்திலே அந்த நகரத்திலிருந்த இரண்டு குடித்தனக்காரர்கள் ஒருவரோடு ஒருவர் விவாதப்பட்டு பீமசேன மகாராஜனிடம் வந்து தங்கள் வழக்கைச் சொல்லி முறையிட்டுக் கொண்டார்கள்.

அவர்களுள் ஒருவன் சொன்னான்: "ஐயா! மகாராஜாவே! இவன் செய்கிற அநீதியைக் கேளுங்கள். இவனும் இவனுடைய, தகப்பன், பாட்டன், பூட்டன், சீயான், முதலானவர்களுமாகத் தலைமுறை தலைமுறையாகக் குடியிருந்து வந்த வீட்டையும் அதைச்சேர்ந்த நிலத்தையும் இவன் எனக்கு விற்றான். நான் கிரயத்துக்கு வாங்கினேன். அதில் ஓர் இடத்திலே சுவர் கட்டுவதற்காக நான் பூமியைத் தோண்டினபொழுது, அதிலே ஒரு புதையல் அகப்பட்டது. அதை நான் புதைத்து வைக்கவில்லை. நான் அதற்குக் கிரயமும் கொடுக்கவில்லை. ஆகையால் நான் இவனைக் கூப்பிட்டு, 'இதை நீயோ, அல்லது உன் முன்னோர்களில் எவரோ தான் புதைத்து வைத்திருக்க வேண்டும். இது உன்னுடைய சொத்து. ஆகையால் நீ இதை எடுத்துக்கொள்' என்று நியாயமாய்ச் சொன்னேன். இவன் அநியாயமாய் அதை எடுத்துக்கொள்ள மாட்டேன் என்று பிடிவாதமாய்ச் சொல்லுகிறான். அவன் தன் குடும்பத்தைச் சேர்ந்த புதையலை எடுத்துக்கொண்டு போகும்படி தீர்ப்புச் செய்ய வேண்டும்" என்று சொல்லி முடித்தான்.

அப்போது பீமசேன மகாராஜன் அந்தப் பிரதிவாதியைப் பார்த்து "இதற்கு நீ என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

அதற்குப் பிரதிவாதி சொன்னான்: "ஐயா மகாராஜா! இவன் அநீதியான வழக்குச் சொல்லுகிறான். நான் வீட்டையும் நிலத்தையும் இவனுக்கு விற்றேன்; மெய்தான். அதிலுள்ள புதையலை நான் புதைத்து வைக்கவில்லை. என் முன்னோர்களும் புதைத்து வைத்திருக்க முடியாது. ஏனென்றால், அப்படி வைத்திருந்தால் அவர்கள் இன்ன இடத்தில் இன்ன புதையலைப் புதைத்து வைத்திருக்கிறது என்று எச்சரிக்கை செய்திருப்பார்கள். அப்படி ஒருவரும் எனக்குச் சொல்லவில்லை. வேறு யார் புதைத்து வைத்த புதையலோ இது. நான் வீட்டையும் நிலத்தையும் விற்றபின் அவனுடைய கண்ணில் அகப்பட்டது. அது அவனுடைய அதிர்ஷ்ட வசமே தவிர வேறில்லை. அதனால் அந்தப் புதையலை அவன் எடுத்துக் கொள்ளுவதுதான் நீதியே தவிர, என்னை எடுத்துக்கொள்ளச் சொல்லுவது மகா அநியாயமாகும். நான் ஒரு நாளும் அதைப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்க மாட்டேன்" என்று தன் கக்ஷியைச் சொல்லி முடித்தான்.

இந்த வழக்கைக் கேட்டு ஆச்சரியம் அடைந்த பீமசேன மகாராஜனுக்கு இதைத் தீர்க்க வழி தெரியவில்லை. இரண்டு பேர் சொல்லுவதும் மிகவும் நியாயமாய்த் தோன்றின படியால், "நீங்கள் என் தமையனாகிய தர்மபுத்திர மகாராஜாவினிடத்தில் போய் இந்த வழக்கைத் தீர்த்துக் கொள்ளுங்கள். அவர்

செய்கிறதை என்னிடம் வந்து தெரிவியுங்கள்'' என்றான்.

அவர்கள் அப்படியே தருமபுத்திரரிடம் போய்த் தங்களுடைய வழக்கைத் தெரிவித்துக் கொண்டார்கள். அவர் வழக்கைக் கேட்டு, ஆச்சரியம் அடைந்து, "நாளைக்கு இந்நேரத்துக்கு இங்கே வாருங்கள். அப்போது நான் தீர்ப்புச் சொல்லுகிறேன்'' என்று அவர்களை அனுப்பிவிட்டார். அவர்கள் பீமசேனனிடம் வந்து நடந்த விஷயத்தைத் தெரிவித்தார்கள்.

உடனே பீமசேனன் அநேகம் வண்டிகள் நிறையச் சர்க்கரையை ஏற்றி, வீதி தோறும் அனுப்பி, நகரத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் வழங்கும்படி உத்தரவு செய்தான். அந்தப்படியே வீதி வீதியாய்ச் சர்க்கரை வண்டிகள் அனுப்பப்பட்டு, எங்கும் சர்க்கரை வழங்கப்பட்டது. மிகவும் சந்தோஷமான காரியம் ஏதோ நடந்திருக்கவேண்டும் என்று எண்ணிய ஜனங்கள் எங்கும் குதூகலமாய் ஆடிப் பாடிக்கொண்டிருந்தார்கள்.

அன்று தன் உப்பரிகையின்மேல் உலாவிக்கொண்டிருந்த தருமபுத்திரர் அந்தக் குதூகலத்தினால் உண்டான இரைச்சலைக் கேட்டு, "இதென்ன நடக்கிறது?'' என்று கேட்கவே, வீதி வீதியாய்ச் சர்க்கரை வழங்கப்படும் செய்தியைச் சொன்னார்கள். "சர்க்கரை வழங்கக் காரணம் என்ன?'' என்று அவர் கேட்க, அவர்கள் "என்ன காரணமோ தெரியாது. பீமசேன மகாராஜாவினுடைய உத்தரவு'' என்று சொன்னார்கள்.

தருமபுத்திரர் பீமசேனனை அழைப்பித்து "நீயா சர்க்கரை வழங்கும்படி உத்தரவு செய்தாய்?'' என்று கேட்டார். அவன் "ஆம்'' என்று ஒப்புக்கொண்டான். "இதற்குக் காரணம் என்ன?'' என்று தருமபுத்திரர் கேட்கவே, அவன் "எனக்கு உண்டான சந்தோஷம்தான் காரணம்'' என்றான்.

"அந்த சந்தோஷம் எதனால் உண்டாயிற்று?'' என்று திரும்பவும் தருமபுத்திரர் கேட்க "தேவரீர் நாளை வரையிலும் பிழைத்திருப்பீர் என்கிற உறுதியான சந்தோஷச் செய்தி எனக்குக் கிடைத்தது தான் என்னுடைய சந்தோஷத்துக்குக் காரணம்'' என்றான்.

"அதெப்படி?'' என்றார் தருமபுத்திரர்.

பீமசேனன் சொன்னான்: "வீட்டில் அகப்பட்ட புதையலைப் பற்றி வழக்கிட்டுக்கொண்டு என்னிடம் இரண்டு நகரவாசிகள் வந்தார்கள். அவர்கள் வழக்கைத் தீர்க்க முடியவில்லை. ஆகையால், அவர்களை உங்களிடம் அனுப்பினேன். நீங்கள் உடனே தீர்ப்புச் சொல்லாமல், அவர்களை 'நாளைக்கு வாருங்கள். நாளைக்கு வந்ததும் தீர்ப்புச் சொல்லுகிறேன்' என்று சொல்லி அனுப்பினீர்கள். அப்பொழுது அவர்களுக்குத் தீர்ப்புச் சொல்லாமல் இருந்ததைப்பற்றி எனக்குக் கொஞ்சம் விசனம்தான். ஆனாலும் அதைவிட அதனால் எனக்கு உண்டான ஆனந்தமே அதிகமாயிருந்தது. இந்த உலகத்திலுள்ள மனித வாழ்க்கை நீர்க்குமிழி போன்றது. ஒரு க்ஷணம் தோன்றிப் பளப்பளப்பாக மினுக்கும். மறுக்ஷணம் வெடித்துத் தொலைந்து போகும். இப்பொழுது இருப்பவன் மறுக்ஷணம் உயிரோடிருப்பான் என்பது உறுதியில்லை. இதை நன்றாய் அறிந்த நீங்கள் அந்த வாதி பிரதிவாதிகளை நாளை வரச்சொல்லியபடியாலும், தாங்கள் ஒரு காலத்திலும் பொய் சொல்லாதவர்கள் ஆதலாலும், நாளைவரை இருப்போம் என்கிற உறுதி உங்களுக்கு இருக்கிறது என்பதை நான் தெரிந்துகொண்டேன். அதனால் அளவிலாத சந்தோஷம் அடைந்து ஊரெங்கும் சர்க்கரை வழங்கச் செய்தேன்'' என்றான்.

அதைக்கேட்ட தருமராஜன் ஒருபுறம் சந்தோஷமும் ஒருபுறம் நாணமும் அடைந்தார்.

(பழங்கதையை ஒட்டி எழுதியது)

அணைகடந்த வெள்ளம்

(ஸ்ரீ. எஸ். சுப்பையா)

அவள் அணைகடந்த வெள்ளமாகி விட்டாள். இனி நான் நினைத்து என்ன பயன்? "சிறு வயதில் உனக்கு அவள் சொந்தமாக இருந்தாள். நீ அவளைக் கிள்ளலாம், அடிக்கலாம், உதைக்கலாம்; அவள் அழுவதைக்கண்டு சந்தோஷப் படலாம். ஆனால் இப்போது? அவளை நீ தொடவும் அருகதை இல்லாத வனாகி விட்டாய்?" என்று சொல்லுகிறது என் மனம்.

"அடி" என்றழைப்பேன். களுக் கென்று சிரித்துக் கொண்டு ஓடி வருவாள். நான் ஏவுவதைத் தட்டாமற் செய்யவேண்டும்; இல்லாவிடில் திட்டுவேன். ஆனால் இப்போ! அந்தக்காலம் மலையேறிவிட்டது.

அவள் என்னிடமிருந்து பிரிக்கப்பட்டதற்குக் காரணம் நான்தான். யார் என்ன செய்வார்கள்? யானை தன்தலையிலேயே தான் மண்ணைவாரிப் போட்டுக் கொண்டால்?

இப்பொழுது நான் அவளைக்கண்டு ஏங்குவது அவளுக்குத்தெரிகிறதா? இல்லையே! என்னை பெரிய மனிதனாக மதித்து ஒதுங்கிச் செல்கிறாள். "அதைக் கண்டு நான் வயிறெரிவதை அவள் உணரவில்லையே. என்ன செய்வது?" என்று எண்ணியதும் தப்புதான்.

* * *

நான் அப்பொழுது பி. ஏ. கிளாஸில் வாசித்துக் கொண்டிருந்தேன். அப்பா இரண்டு கடிதம் எழுதினார். நான் தலைகால் தெரியாமல் பதில் எழுதினேன். ஆனால் இப்போது அதன் பலனை அனுபவிக்கிறேன்.

"அடேய்! அப்பா, சொல்லுகிறேண்டா கேளுடா தட்டாதே. உன் அத்தைபெண்ணடா அது. உன் காலுக்குச் செருப்பாக நடப்பாள். உன் அத்தை தான் சிறுவயதில் மண்ணாய்ப்போனாள். அவளுடைய பொண்ணாவது நம் வீட்டில் இருக்கட்டுமேடா! அவள் இப்போது ராணி மாதிரி இருக்கிறாள்; அவளை அடுத்தவனுக்குக் கைபிடித்துக் கொடுக்க மனமில்லை; நீ வேறு இன்னொரு பெண்ணை யாவது கல்யாணம் செய்துகொள்ளடா. இவளை பாதத்தைக்கழுவவாவது வைத்துக்கொள். அடுத்தவனிடம் கண்ணைக் கசக்கினால் என்மனம் பொறுக்காதடா, மாணிக்கம்! இப்பொழுது வந்து பார்த்தால் நீ மயங்கிப்போவாய், லக்ஷிமி அவள் முகத்தில் தாண்டவமாடுகிறாள்........."

இதற்குமேல் தான் ஒரு தந்தை தனயனுக்கு என்ன எழுதுவார்? என் நாசமாய்ப்போன படிப்பு என்ன எழுதிற்று தெரியுமா?

".........நான் இப்பொழுது கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை. ஆகவே லோகுவை எனக்காக வைத்திருக்க வேண்டாம்......"

"அடேய் மாணிக்கம்...... உன்னிடம் நான் என்ன எழுதுவது? அதனிடம் உன் கடிதத்தைப் படித்துக் காட்டியதிலிருந்து அழுதுகொண்டிருக்குடா - நீ வந்தால் தான் அது வேறு யாரையாவது கட்டிக் கொள்ளுமாம். உன்னை நினைத்து உருகுகிறதடா அப்பா! எழுதுகிறேன். நீ ஒரு வார்த்தைக்கும் தட்டி நடந்த மகனல்ல. இந்த விஷயத்திலும் அப்படியே நடப்பாயா? பெண்களுக்கு என்ன படிப்பு வேண்டியிருக்கு? வேணுமென்றால் படித்துக்கொண்டு விடுகிறாள். அதற்காக அவளை வெறுத்துத் தள்ளாதே. நீ எங்கே இருந்தாலும் சரி! நம் காரியங்கள் யாவையும் கண் காணித்துக் கொள்வாள். இன்று கூட உலகம்மாதான் நடுகையை கண்காணிப்பதற்குச் சென்றிருக்கிறாள்................."

இதற்கு நானனுப்பிய கடிதம் இடைவழியில் நாசமாய்ப் போயிருக்கக்கூடாதா!

தெய்வமே. என்னே என் சக்கைபோன்ற வாழ்வு!

* * *

தந்தை அவளை வேறொருவனுக்குக் கொடுத்து விட்டார். ஆனால் இப்போது நான் கதற வேண்டும்! என் பட்டம் பரீக்ஷை குறுக்கே வரவில்லையே. அவைகள் எங்கே? அவள் புருஷன் அதிகம் படிக்காதவன்தான். ஆனால் என்ன குதூஹலம் அவனுக்கு! என் வாழ்வின் ஒளியை அவன் பயன் படுத்திக்கொள்கிறான். ஆனால் அது அவன் குற்றமா?

* * *

இன்னும் என்மேல் குறைவுபடாத அன்பை வைத்துக்கொண் டிருக்கிறாள். ஆனால் இது முற்றிலும் வேறுவிதமானது. என்னிடம் மரியாதையல்லவா வைத்திருக்கிறாள்! அப்பொழுது ஓடியாடிப் பழகிய குணங்களை எங்கே ஒளித்து வைத்திருக்கின்றாள்? ஆ! நான் அவைகளைத் திரும்பவும் காண்பேனா! என்ன பகற்கனவு? தரையிற் கவிழ்ந்த பாலாகி விட்டாளே அவள்தான்!

* * *

என்னைப் பார்ப்பதற்காக, தன் கணவனையும் உடன் அழைத்து வந்திருந்தாள். என்னவோ ஒரு பாவமுமறியாத அவன் மேல் எனக்கு ஏன் அவ்வாறு வெறுப்புத் தட்ட வேண்டும்?

லோகு நான் என் அறையில் தனியாயிருக்கையில் கையிற் காபியோடு வந்தாள். ஆ! அவள் மேனிதான் என்ன சுவர்ண மயமான நிறம். முகத்தில் என்ன குதூஹலம்! மரியாதையாக மேஜைமேல் வைத்து விட்டு ஒதுங்கி நின்றாள். அவள் முகத்தைப் பார்க்கக்கூட எனக்குத் தைரியம் இல்லை அப்போது.

"அத்தான்" என்றாள். என் செவிகளில் இன்பத்தேனைப் பாய்ச்சியது போலிருந்தது.

"என்ன லோகு" என்று பரிவுடன் வினவினேன்.

"என் புருஷனுக்கு கொஞ்சம் கணக்குத் தெரியும்; நீங்கள்தான் எங்கேயாவது ஒரு வேலைபார்த்து வைக்க வேண்டும். எனக்கு வேறுயார் கதி?"

'அடடா; அவள் வாயிலிருந்து நான் இந்த வார்த்தைகளைத்தானா கேட்க வேண்டும்? தெய்வமே!'

"லோகு" என்று அழைத்தேன். "என்ன அத்தான்" என்றாள். "நான் பாவியடி, உன்னையடைய கொடுத்து வைக்காத பாவியடி!" என்றேன்.

என் கருத்தை நன்கறிந்தாள் லோகு. அவள் என் நிலைமையை உணர்ந்தாள். கால்பெரு விரலை நோக்கினாள்...

"அ...த்...தா......ன்... நான் பாவி எத்தனை வருஷம்...... இருந்திருக்கக் கூடாதா.......... என் தலையில் அப்படித்தான் போட்டிருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?........."

'டக்டக்' என்று சப்தம் கேட்டது. எங்கள் இன்ப முடிச்சில் 'பளிச்' சென ஒரு கூரிய வாள் பாய்ந்து எங்களை இரு துண்டாக்கியது.

நான் வராண்டாவிற்குப் போனேன்.

லோகு காப்பியைக் கொட்டிவிட்டு அதை என்னவோ செய்து கொண்டிருந்தாள். அவன் வந்து, "என்ன லோகு, அண்ணாவுக்கு கொண்டு வந்த காபியை இப்படி மடத்தனமாய் சிந்தி விட்டாய்?" என்றான்.

அயல் நாட்டுப் போட்டி

(ஸ்ரீ ஜி. எல். மேத்தா)

இந்தியாவில் அயல் நாட்டு முதலுக்கு ஒருவிதமான தடையும் கிடையாது. உண்மையில் அது ஆரம்பத்திலிருந்தே நிலைத்து வருவதால் அது ராஜீய அநுகூலங்களைப் பெற்றிருந்தது. ஆகையால் அயல் நாட்டுக் கம்பெனிகளுடன் போட்டி போடுவதென்பது இந்தியக் கம்பெனிகளுக்கு முடியாத காரியம். ஏனென்றால் அவைகளுக்கு ஏராளமான முதல் இருக்கிறது. நீண்ட அனுபவமிருக்கிறது. மேலான சாஸ்திரீயக் கருவிகளும் சாமர்த்தியமும் இருக்கின்றன.

இதுமட்டுமல்ல; மேல் ஸ்திதியிலுள்ள ஓர் தேசத்திலிருந்து தொழில் அபிவிருத்தியின் ஆரம்ப தசையிலுள்ள ஓர் தேசத்திற்கு வரும் முதலுக்கும் சமய நிலையிலுள்ள தேசங்கள் ஒன்றுக்கொன்று போட்டுக்கொள்ளும் முதலுக்கும் வித்தியாசம் இருக்கிறது. அயல் நாட்டு முதலான பொருளாதார பலன் ஒருபுறமிருக்கட்டும்; இந்தியாவிலுள்ள அயல் நாட்டுக் கம்பெனிகள் இங்கிலாந்திலிருந்து நிர்வகிக்கப்பட்டு இந்தியரல்லாதவர்களால் நடத்தப்படுகிறது. சைனா, துருக்கி, ஈரான், முதலிய நாடுகளில் அயல் நாட்டு முதல் ராஜீய அதிகாரத்தைக் கைப்பற்றும் சக்தி வாய்ந்த கருவியாக இருந்திருக்கிறது. அதைக்கொண்டுதான் பாதுகாப்புக்களும் உரிமைகளும் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவில், அயல் நாட்டு முதல் ஓர் பொருளாதாரக் கோட்டையாக இருக்கிறது. அந்தக் கோட்டைக்குள்தான் பிரிட்டிஷார் ராஜீய அதிகாரத்தையும் அவர்கள் எண்ணிக்கையை விட பல பங்கு அதிகமான செல்வாக்கையும் பெற்று பத்திரமாக வாழ்ந்து வருகிறார்கள்.

இந்திய ஜனங்கள் இந்தியக் கம்பெனிகளுக்கு பாதுகாப்பளிக்க வேண்டுமென்று எதற்காகக் கேட்டார்களென்றால், இந்தியத் தொழிலையும், இந்திய முதலையும், இந்திய நிர்வாகத்தையும் முன்னேற்றமடையச் செய்வதற்காக. ஆரம்பத்தில் இந்திய சர்க்கார் விஷயத்தைப் புரிந்து கொண்டு கோரிக்கையை அங்கீகரித்தார்கள். இண்டஸ்ட்ரியல் கமிஷனையும் ஏற்படுத்தினார்கள். இந்திய செல்வம் பெருக வேண்டுமென்றால், தொழில் இந்தியர்களால் நிர்வகிக்கப்படவேண்டும். ஆனால் இந்திய தேசியத் தொழில் அபிவிருத்தி முறையானது இத்தேசத்தில் சமீபத்தில் தோன்றியிருக்கும் ஓர் புது விஷயத்தால் நாசமாக்கப்படுகிறது. தடைவரிச் சுவரின் பாதுகாப்பில், அயல் கம்பெனிகள் பல கிளம்பி இந்திய சர்க்கார் ஸ்டோரின் ஆதரவு பெற்று மக்களின் 'ஸ்வதேசி' அபிமானத்தை உபயோகித்துக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றன. இந்த கம்பெனிகள் "இந்தியா லிமிடெட்" என்று பெயர் வைத்துக்கொண்டிருக்கின்றன. அவை அயல் நாட்டுக்கம்பெனிகளின் பிராஞ்சுகள்; அல்லது இந்தியக் கம்பெனிகள் என்று தோன்றும்படி வேஷம் போடும் போலி. அது போன்ற கம்பெனிகள் இத்தேசத்தில் 200 இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இவை இந்தியக் கம்பெனிகளுடன் போட்டி போட்டு தலை தூக்க முடியாமல் செய்து விடுகின்றன. உதாரணமாக, நெருப்புப் பெட்டித் தொழிலில் 100-க்கு 60 பங்கு அயல் கம்பெனிகள் தான். கல்கத்தாவிலும் அதற்கு அருகிலும் உள்ள 17 இந்தியக் கம்பெனிகளும், மேற்கு இந்தியாவிலுள்ள 17 கம்பெனிகளும், சென்ற இரண்டு வருஷ காலத்தில் அயல் நாட்டுக் கம்பெனிகளுடன் போட்டி போட முடியாமல் மூடப்பட்டுவிட்டன. அதேமாதிரி ஸிகரட் தொழிலில் 95% தொழில் அயல் கம்பெனிகள் வசம் இருக்கின்றன. அதேமாதிரி சோப் ரப்பர், செருப்பு முதலிய தொழில்களில் அயல் நாட்டுக் கம்பெனிகள் வெளியிலே இருந்து

(157-ம் பக்கம் பார்க்க)

மைசூரில் ஜல வசதி

(ஒரு நிருபர்)

சென்ற மார்ச்சு 4ம் தேதியோடு முடியும் வாரத்தின் சீலன் ரிபோர்ட்டைக் கவனித்தால் மைசூர் சமஸ்தானம் முழுவதிலும் ஜலக்கஷ்டமே இல்லாமலிருப்பதை யறியலாம். மழை பெய்யாமல் சதி செய்யும் இக்காலத்தில் இந்தியாவின் பல விடங்கள் ஜலக்கஷ்டத்தினுல் வருந்திக் கொண்டிருக்கும்போது மைசூர் சமஸ்தானம் இவ்வித பாக்கியத்தைப் பெறுவது அதிசயமல்லவா ?

மைசூரில் இவ்விதமான ஜலக்குறைகள் இல்லாமல் இருப்பது அதன் அதிர்ஷ்டத்தினுலல்ல. அந்த சமஸ்தானச் சர்க்கார் செய்த கட்டுப்பாடான திட்டங்களால் தான்.

ஒவ்வொரு சதுர மைலுக்கு ஒரு ஏரியாக சமஸ்தானத்தில் 23,404 ஏரிகள் இருக்கின்றன. கிராமவாசிகள் ஏரிகள் ரிப்பேர் வேலைக்கு சுமார் 4 லக்ஷ ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. இதைத் தவிர சென்ற மூன்று வருஷ காலமாக செய்துவந்த ஏரிகள் ரிப்பேர் வேலைக்காக மொத்தம் 13 லக்ஷ ரூபாய் செலவாகி இருக்கிறது. கடந்த வருஷத்தில் ரூ. 2,97,414 செலவில் 276 பெரிய ஏரிகளும், 64 சித்தேரிகளும் மராமத்து செய்யப்பட்டன.

நடந்த 3 வருஷ காலத்தில் 7 லக்ஷ ரூபாய் செலவில் 2,429 கிணறுகள் வெட்டப்பட்டன. இவைகளில் 507 ஆதி கர்ணுடகர்களுக்கென்று பிரித்துவிடப்பட்டிருக்கின்றன.

1915ம் வருஷத்திலேயே தண்ணீர் சேந்தி எடுத்துக்கொள்ளத்தகுந்த கிணறுகள் கிராமங்களில் வெட்ட ஒரு பெரிய திட்டம் ஒன்று போடப்பட்டது. இதைத் தவிர தனியாக ஜல வசதி ஏற்படுத்த வருஷத்திற்கு ரூ. 1½ லக்ஷம் வீதம் 3 வருஷங்களுக்கு பொருளுதவியளிக்க ஏற்பாடாயிற்று.

1937ஞு ஜூன் மாதத்தில் பிரதிநிதிச் சபையில் பேசும்பொழுது திவான், தேசத்திலிருக்கும் ஜலக்குறைவுக் கஷ்டங்களை எடுத்துக்கூறி, அக்கஷ்டங்களை ஒழிக்க கிணறுகள் வெட்ட ஏற்படுத்தி இருக்கும் திட்டங்களைக் கையாண்டு சீக்கிரத்திலே வேலையை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று சொன்னுர்.

அதுபோலவே சர்க்கார் 1938 மே மாத முதல் ஐந்து வருஷத்திற்குள் 15 லக்ஷ ரூபாய் சேர்த்து இவ்வேலைக்காக கொடுக்க நிச்சயித்தார்கள். ஒவ்வொரு வருஷமும் சேர்ந்த பணத்தை ஒவ்வொரு ஜில்லாவிலிருக்கும் "கிராமத் தண்ணீர் வசதி நிதி"க்கு பகிர்ந்து கொடுத்தார்கள்.

கடந்த 1937–38 வருஷத்தில் குடிக்கும் தண்ணீர் வசதி யளிப்பதற்காக ரூ. 2,76,205 செலவிடப்பட்டது. இந்த வேலை திவான் பிரதிநிதிச் சபைமுன் எடுத்துக்கூறிய முறைப்படி நடத்தப்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்த ஜில்லா டிப்டி கமிஷனர் அந்த ஜில்லாவில் இருக்கும் "ஜல வசதி நிதி" அளவுப்படிக்கு செலவு செய்து வேலையை செய்வித்தார். நிதிப்பணம் போதாவிட்டால் சர்க்காரிடமிருந்து கிராண்டுக்கு அவர் ஏற்பாடு செய்யலாம். "நிதியில் பணமில்லாவிட்டால் அவசரமாக தண்ணீர் வசதி அளிக்கவேண்டிய ஸ்தலங்களில் வேலை செய்வதை நிறுத்தி தாமதிக்கக் கூடாது; ஏனென்ருல் இருந்த பணம் செலவழிந்துவிட்டால் சர்க்கார் மேலும் கொடுக்கத் தயாரா யிருக்கிருர்கள்" என்று திவான் கூறியபடி வேலைகள் நடந்தேறின.

சிக்கனத்தை அபேக்ஷித்தும், கிராமவாசிகளை தொழிலில் பயிற்சியடைவிக்க வேண்டும் என்பதை உத்தேசித்தும், இவ்வேலைகள் காண்டிராக்டாக கிராமங்களில் விடப்பட்டன.

இவ்வேலை நன்ருக நடைபெற ஒவ்வொரு தாலுக்காவிலும் அதன் அவசரத்திற் கேற்றபடி பிறித்துள்ள வெட்ட வேண்டிய கிணறுகள், ரிப்பேர் செய்ய

வேண்டிய கிணறுகள் இவைகளின் 'லிஸ்ட்' ஒன்று தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்த லிஸ்ட் இன்னும் பல விஷயங்களை யும் தெரிவிக்கிறது.

அந்த தாலுக்காவிலுள்ளவர்கள் இந்த வேலைக்காக எங்கெங்கு விதமாக எவ்வளவு அளவுக்கு உதவி யளிப்பார்கள் என்பதும் அதில் கண்டிருக்கும்.

ஒரு வருஷ ஆரம்பத்தில், எங்கெங்க தாலுக்காக்களில் அவ்வருஷத்தில் வேலை நடை பெறவேண்டும் என்றும், எது முத லில் எது பிறகு செய்யவேண்டும் என் பதையும், சர்க்கார் திட்டம்போட்டு வைத்துக் கொள்கிறார்கள்.

ஒரு ஜில்லாவில் வெட்டவேண்டிய கிணறுகளின் எண்ணிக்கையையும் நடத் தப்போகும் வேலைகளையும் நிர்ணயித்திருக் கும் லிஸ்ட் ஒன்று, அந்த ஜில்லா டிப்டி கமிஷனர் ஆபீஸில் வைக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு மாதத்திலும் நடந்த வேலை ஜில்லா ஆபீஸில் கணக்கிடப்பட்டு வரு கிறது. இப்படி தயார் செய்யப்பட்ட ரிபோர்ட் ரெவின்யு கமிஷனர் மூலம் சர்க் காருக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

சாதாரணமாக ஒரு கிராமத்தில் கிராம வாசிகள், செலவாகப்போகும் மொத்த தொகையில் பாதியை ஏற்றுக் கொண்டா லொழிய அந்த கிராமத்தில் கிணறு வெட்ட சர்க்கார் அனுமதி இல்லை. ஆனால் அந்த பிரதேசத்தில் வசிக்கும் ஜனங்கள் ஏழைகளாகவிருந்தால் அவர்களுக்கு மாத் திரம் அவர்கள் கொடுக்கவேண்டிய தொகையில் சிறிதளவு குறைத்து வாங்கிக் கொள்ளலாம். இது டிப்டி கமிஷனரின் இஷ்டத்தைப் பொருத்தது. இதைப் போல் சலுகை காண்பிக்க வேண்டிய இடங்களின் லிஸ்ட் ஒன்று சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

வெட்டப்பட்ட கிணறுகள் அசுத்த மாகாமல் சுற்றுச்சுவர்களால் காப்பாற் றப்பட்டு வருகின்றன. ஸமஸ்தானத்தில் எல்லா ஜில்லாக்களிலும் 115 குழாய்க் கிணறுகள் (Bore Wells) இருக்கின்றன. இவைகளிலிருந்து தண்ணீர் கையாலாவது அல்லது மின்சார சக்தியாலாவது வெளியி லெடுக்கப்படுகிறது.

ஜாத்ரைகளில் குழாய்கள் மூலம் தண் ணீர் வசதி அளிக்கப்பட்டு வருகிறது. இவைகளில் 9 ஜாத்ரைகளுக்கு மாத்திரம் குழாய் வைக்க ரூ. 93,000 செலவாயிற்று. சில வாரசந்தைகளிலும் குழாய்வைக்கப் பட்டிருக்கின்றன. சென்ற பத்து வருஷங் களாக அனுமதிக்கப்பட்டு தண்ணீர் வசதிக்காக நகரங்களில் செலவழித்து வந்த தொகை சுமார் 7 லக்ஷ ரூபாய் ஆகிறது. 1937-38ல் கொடுக்கப்பட்ட ரூ. 1 லக்ஷம் மானியத் தொகை இதில் சேர்க்கப்பட்டதல்ல. இந்த மானிய தொகை 1938-39ல் ரூ.1,50,000 ஆக அதி கரித்தது.

இம்முறைகளை அனுசரித்து நம் மாகா ணத்திலும் வேலை செய்து வந்தால் தண்ணீர் கஷ்டமே தென்படாது என்று நம்பக்கூடியதாக இருக்கிறது.

(155-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டி போட்டதற்குப் பதிலாக இப் போது இங்கேயே வந்து போட்டி போடு கின்றன. பஞ்சாபிலுள்ள இம்பீரியல் கெமிகல் கம்பெனி ரசாயனக் கம்பெ னியை ஆரம்பித்திருப்பது மற்றொரு உதாரணம்.

கிராமம்

(ஸ்ரீ கு. ப. ராஜகோபாலன்)

இந்தியா 7 லட்சம் கிராமங்கள் அடங்கிய நாடு; அந்தக் கிராமங்களின் பெருவாரியான தொழில் விவசாயம்; எனவே கிராமத்தை ஒரு விவசாய மூலமாகக் கொண்டு இந்தியாவையே இந்த விவசாய எண்கள் அடங்கிய ஒரு பெரும் தொகுதி என்று கூறலாம். அரசாங்கமே இந்த விவசாயப் பிரிவின் அடிப்படையில் தான் நிர்மாணம் செய்யப் பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் பெருவாரியான வருமானமான நிலவரி கிராமங்களின் மூலம் தானே வசூலாகிறது?

கிராமம் அரசாங்கத்தின் முதல் எண் என்று சொல்லலாம். அதன் கணக்குகள் பூராவும் அங்கே தான் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பிக்கப் படுகின்றன. அதன் நிர்வாக இயந்திரம் அங்கேதான் ஆரம்பமாகிறது. கிராமத்தை ஒரு முறையில் அரசாங்கத் தொழிற்சாலையின் 'இஞ்சின் ரூம்' என்று கூடச் சொல்லி விடலாம். அங்கிருந்து தான் நிர்வாகத்திற்குத் தேவையான சாதனங்கள் பூராவும் உற்பத்தியாகி வருகின்றன. நிலவரி, கலால் வரி என்ற இரண்டு பெரிய ரத்தக்குழாய்கள் கிராமம் என்ற ஹிருதயத்திலிருந்து தான் கிளம்புகின்றன.

இந்த முறையிலேயே நாம் இப்பொழுது கிராமத்தின் அமைப்பை ஆராய்வோம். அதாவது கிராமம் அரசாங்கத்தின் ரெவினியூ கணக்குகளின்படி எப்படி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை ஆராய்வோம். பிரிட்டிஷ் அரசாங்கம் அநேகமாக மகம்மதிய அரசர்களும் அவர்களுக்கு முன் ஹிந்து அரசாங்கமும் வகுத்தபடியே கிராமத்தை எல்லை கட்டியிருக்கிறார்கள். ரெவினியூ நிர்வாக முறைகூட பெரும்பாலும் முந்திய மாதிரியே தான் இருக்கிறது.

ஒரு வித்தியாசம். கிராம அமைப்பின் மூலம் பழைய அரசர்கள் கிராமத்தை செல்வக்களஞ்சியமாக்கி இருந்தார்கள். தன் தேவைக்கு வேண்டியது போக மிஞ்சினதைக் கொண்டு சந்தையில் போட்டு பண்டமாற்று முறையில் இதர தேவைகளைத் திருப்தி செய்துகொண்டு குறைவின்றி இருந்தது கிராமம். நிலவரி ஒன்று தான் அரசாங்கத்தின் பொக்கிஷத்திற்குப் போயிற்று. மற்றபடி கிராமப் பஞ்சாயத்துகள் தாமே சகலத்தையும் நிர்வாகம் செய்தன. கிராம சுயஆட்சி நடந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் நிலவரி செட்டில்மெண்டிற்கு செட்டில்மெண்டு அதிகமாகி கிராமத்தின் வரியைப்பிடுங்கி எடுத்துவிட்டது. கலால்வரி என்ற புதுவரி விபரீதமாக வளர்ந்து கிராமத்தை சக்கையாகப் பிழிந்து எறிந்துவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சி என்ற ரத்த வெறி கொண்ட தேவதை கிராமத்தின் ரத்தத்தை நிலவரி, கலால்வரி என்ற இரண்டு உரிஞ்சு குழாய்கள் மூலம் சொட்டின்றி உரிஞ்சிக் குடித்து எப்பம் விட்டுவிட்டது. கிராமத்தின் உடல் சோகைகொண்டு கிடக்கிறது. அதில் ஊட்டம் எற்றுவதெப்படி? அதை மறுபடியும் எழுந்து நடமாடச் செய்வதெப்படி? நிலவரியை ஒன்றுக்குப் பாதியாகக் குறைக்கவேண்டும். கலால் வரியையே ஒழிக்க வேண்டும். அப்பொழுது மறுபடி கிராமத்தில் ரத்த ஒட்டம் எற்படும். கிராமப் புனருத்தாரணம் என்பது அப்பொழுது தான் சாத்தியம். அதற்குப்பிறகு தான் இதர வசதிகளை எற்படுத்தவேண்டும். சுவற்றை வைத்துக்கொண்டுதானே சித்திரம். கிராமம் இருந்தால்தானே சீர்திருத்தம்?

கிராமம், பிர்க்கா, தாலூகா, ஜில்லா, மாகாணம் என்று அரசாங்கக்கட்டிடம் அமைந்திருக்கிறது. அளந்து (சர்வே செய்து) எல்லை கட்டப்பட்டது கிராமம். சாதாரணமாக ஜனங்கள் குடியேறி நெருங்கியிருக்கும் ஒரு சிறிய பிரதேசத்தை வரி வசூல் செய்வதற்கு வசதியளிக்குமாறு ரெவினியூ கிராமமாகச்செய்து தாலுக்காவிற்குள் அதற்கொரு நம்பர்கூட அளித்திருக்கிறார்கள். கிராமத்தில் நிர்வாக இயந்திரத்தின் முதல் சக்கரங்கள் சுழலுகின்றன. கிராம முன்சிபும் கர்ணமும் கிராமாதிகாரிகள். முனிசிப், தான் கிராம

(160-ம் பக்கம் பார்க்க)

கிராம முன்னேற்றம்

ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மந்திரி சபைகள் இரண்டு வருஷ காலமாக அரசாங்க நிர்வாகம் செய்தபோதிலும், வங்காளத்தைத் தவிர வேறு எந்த சர்க்காரும் கிராமக் கைத்தொழில் சம்பந்தமாக எவ்விதமான பரிசிலனையும் செய்யவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. இந்தியாவில் பல பாகத்தில் ஏராளமான தொழில்களும் வியாபாரங்களும் இருந்தபோதிலும், நெசவுத்தொழிலையே நாம் சிந்திப்பதைப் பார்த்தால் நமக்குப் பொருளாதார அறிவின்மையைத்தான் காட்டுகிறது. கைத்தறி நெசவுத்தொழில் முக்கியமான தொழில்தான். விவசாயத்தைத் தவிர ஜனங்கள் இதைத்தான் முக்கியத் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அத்தொழில் சுதேச மில் தொழிலுடனும் அயல்நாட்டு மில் தொழிலுடனும் போட்டி போடுவதால் ஏற்படக்கூடிய சில பிரச்னைகளை எழுப்புகிறது. எவ்வளவோ கொடிய கஷ்டங்களையும் எதிர்த்து நெசவுத் தொழில் இன்றைக்கும் உயிரோடிருப்பதைப் பார்க்கும்போது இந்தப் பிரச்னையை நன்றாக, களங்கமில்லாத மனப்பான்மையுடன் ஆராய வேண்டிய அவசியம் உண்டாகிறது. நாம் சம்பந்தப்பட்டவரை, பொருளாதார நோக்கத்துடன் பச்சாத்தாபத்துடன் விஷயத்தைக் கவனிக்கும்போது, "கைத்தறி நெசவு நாசமாய்த்தான் போகப்போகிறது. ஆகையால் வந்தது வரட்டும் என்று விட்டுவிடுவோம்" என்று யாராவது எண்ணினால் முட்டாள்தனமென்று கூறுவோம். கைத்தறி நெசவுத் தொழிலுக்கு இருக்கும் விசேஷ மதிப்பு ஒரு புறமிருக்கட்டும். இந்தியாவில் கிராமப் பொருளாதாரத்தில் இதற்கு உள்ள ஒரு முக்கியத்துவத்தைப் பார்க்கும்போது இவ்விஷயத்தை நன்றாக ஆராய்தல் அவசியம் என்பதை அறிகிறோம். விவசாயிகளின் வாங்கும் சக்தி அதிகரிப்பதால் தேவை உண்டாகிறதல்லவா, அதை கைத்தறி நெசவுத்தொழில் பூர்த்தி செய்வது தேசத்தின் பொருளாதார நலனுக்கும் பொருத்தமானதுதான். இந்தியாவில் விலையாகும் உயர்ந்ததும் மட்டமானதுமான துணிகள் விஷயத்தில் கைத்தறி நெசவுத் தொழிலுக்கு அனுகூலமிருப்பதை இந்த சமயத்தில் நாம் கவனிக்க வேண்டும். உயர்தர துணிமணிகளும் கரடுமுரடான வேஷ்டி துண்டுகளும் கைத்தறி நெசவின் ஏகபோக உரிமையாகும். மூலப்பொருள்களை வாங்கவும் கடன் வசதிகளுக்கும் இடமிருந்தால் கைத்தறி நெசவுத் தொழில் மில் தொழிலோடு ஏன் போட்டி போடக்கூடாது. பார்க்கப்போனால், கைத்தறி நெசவுக்காரர்கள், சிற்சில இடங்களைத் தவிர அநேகமாக உள்ளூர் சந்தையில் தான் விற்பனை செய்கிறார்கள். மேல் வகுப்பினரும் மத்தியவகுப்பினரும் மில்களை ஆதரித்தால், மற்றஜனங்கள் தங்களைப் போன்ற சாதாரண ஜனங்களிடத்தில் வாடிக்கை வைத்துக் கொள்ளுகிறார்கள். இப்போது செய்யவேண்டியது என்னவென்றால், நெசவுக்காரர்களின் தேவைகளை ஆராய்ந்து வசதி அளிக்கவேண்டும். தேசமெங்கும் மின்சார வசதி கிடைப்பதால், கிராமத்தொழில் அதை உபயோகித்துக்கொண்டு பெரிய தொழிற்சாலைகளைப்போல சிக்கனமாக தொழிலை நடத்தலாம். அதிகாரிகள் இவ்விஷயத்தைப் பரிசிலனை செய்வது அவசியம்.

கைத்தறி நெசவு விஷயமாகக் கூறியவை மற்ற எல்லாக் கிராமத் தொழிலுக்கும் பொருத்தம். தனித்தனியாக எடுத்துக்கொண்டால் முக்கியமிரா து. எல்லாவற்றையும் சேர்த்துப் பா . ல் கிராமவாசிகளின் நலனுக்கு முக்கியமாகத் தோன்றும். முன் கா . த்தில் கிராமத் தொழில்களை கலையாகவும் சுக வாழ்விற்கான பொருளுற்பத்தியாகவும் கருதினார்கள். சாதாரணமான பொருளாதார அளவலாகக் கருதவில்லை. நிரந்தரமான வாழ்க்கைச் சாதனமாக இவ்வேலைகள் கருதப் படவில்லை. தொழிலாளர்கள் எதற்காக வேலை செய்தார்களென்றால் பணக்காரர்கள் போஷணையைப்பெற. நிரந்தரமான தேவையைப் பூர்த்தி செய்வதற்காக அல்ல. ஆகையால் கிராமசமூகம்

சக்தி வாய்ந்த நாகரீக இயக்க வலையில் விழுந்ததும், மேற்சொன்ன தொழில்கள் சகிக்கமுடியாத கஷ்டத்திற்குள்ளானதும், ஒரேயடியாக செத்துப்போகும்படியான நிலைக்கு உள்ளானதும், இயற்கையேயாகும். இந்த தொழிலிலுள்ள கலை அம்சத்தைப்பார்த்து அதன் பொருளாதார அம்சத்தை கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது. இந்தியாவின் கிராம வாழ்க்கையில் மேஜை நாற்காலி முதலிய மரச் சாமான்கள் கூட அனுவசியமான சாமான்களென்று கருதப்பட்டன. ஆனால் ஜனங்கள் கல்வி கற்கத் தொடங்கியதிலிருந்து புரட்சிகரமான வாழ்க்கைத் தத்துவத்தை சிலாகிக்கத் தொடங்கினார்கள். அதனால் ஜனங்கள் வரும்படியில் சிறிது உயர்வேற்பட்டால் கூட, அது வேலையில்லாமல் பசியால்வாடும் தொழிலாளிகளுக்கு வேலையைக் கொடுக்கிறது. அதாவது, வேலைகிடைப்பதால் உண்டாகும் ஓர் சுகத்தை கிராமங்கள் உணரும்படி செய்யவேண்டும்.

கிராம ஜனங்களின் விவசாய உற்பத்தியை அதிகப்படுத்தி, புதிய உப கைத்தொழில்களை ஆரம்பித்து, கிராம உற்பத்தியை அதிகப்படுத்தினால் மட்டும் போதாது. கிராமத் தொழிலாளர்களுக்கு பணம் போகும்படி ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது, சிற்சில வேலைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக சம்பளமும், பண வருமானமும் கிராமத்தாருக்குக் கிடைக்கும்படி செய்யவேண்டும். கிராமப் புனருத் தாரண திட்டத்தில் மேற்சொன்ன கிராமத்தொழில் விருத்தியை முதலில் வைத்தால், நமது பொருளாதார ரத்தம் வேகமாகப் பரவியோடும்.

இத்தகைய திட்டம் சர்க்கார் கையிலோ அல்லது அவர்கள் மேற்பார்வையிலோ இருக்க வேண்டியது அவசியம். மேலும் அது சர்க்காரின் வரவுசெலவு திட்டத்தைப் பொருத்ததாக இருக்கவேண்டும். பொருளாதார முன்னேற்றத்திற்கான எந்த திட்டமும் பலனைக்கொடுக்கும் பொதுக்கடனை அதிகமாக்கக்கூடியது தான். உண்மையில், நாணயச் செலாவணி அதிகரிப்பும், பொதுக்கடனில் அபிவிருத்தியும், கொடுக்கல் வாங்கல் முறையில் மாறுதலும், பொருளாதார நிர்மாணத்தில் சகஜமேயாகும். கிராமப் பிரதேசங்களில் உள்ள வேலையாட்களுக்கு வேலைகொடுக்கக்கூடிய வழிகளில் பொதுப் பணத்தை செலவழிக்கும் திட்டங்களை வகுக்க வேண்டியதன் அவசியத்தை இங்கே வற்புறுத்துகிறோம்—இந்தியன் பினன்ஸ்.

(158-ம் பக்கத் தொடர்ச்சி)

மாஜிஸ்திரேட்; தலையாரி போலீஸ்காரன்; கர்ணம் கிராம அமைச்சன்.

கிராமத்தில் அடங்கிய நிலங்கள் பூராவும் நான்கு பெரிய பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனர்; புறம்போக்கு, தீர்வை ஏற்பட்ட தரிசு கைப்பற்று தீர்வை ஏற்படாத தரிசு மலைகள், காடுகள், ஆறுகள், குளங்கள், ஓடைவாய்க்கால்கள், குடியிருப்புகள் இவைகளெல்லாம் புறம்போக்கு; சாகுபடிக்கு லாயக்காக இருந்து அளந்து தீர்வை விதிக்கப்பட்டு சர்க்கார் கைவசம் இருப்பது தீர்வை ஏற்பட்டதரிசு. விவசாயிகளின் அனுபோகத்தில் அவர்கள் உழுது சாகுபடிசெய்யும் நஞ்சை, புஞ்சை இரண்டும் கைப்பற்று நிலங்கள் என்ற பகுதியில் இருக்கின்றன. பாக்கியெல்லாம் தீர்வை ஏற்படாத தரிசு; அந்தப்பிரதேசம் எதற்கும் தற்காலம் லாயக்கில்லை என்று அர்த்தம். சர்க்காரே அவற்றை அளந்து வரி ஏற்படுத்தவில்லை. அவை பெரிய பெரிய பிளாக்குகளாக இருக்கும்.

புறம்போக்குகள் பலவகைப் பட்டவை. மேற்கூறியபடி மலை, காடு, ஆறு, குளம் ஓரக்கால்கள், நத்தம், களம், மயானம், மந்தை இவை சர்க்காருக்குச் சொந்தமானவை. இவற்றில் களம், மயானம், மந்தை முதலியன கிராமத்திற்குப்பொதுவான இடங்கள் எல்லோரும் உபயோகிக்கலாம். ஆனால் மற்ற இடங்களை சர்க்கார் அனுமதியின்றி ஆக்கிரமிக்கக் கூடாது. அவர்கள் அனுமதிபெற்று ஆட்சேபனை இல்லாத ஆறு முதலிய புறம்போக்குகளையும் நத்தம் புறம்போக்கையும் ஆக்கிரமிப்பு செய்து அனுபவிக்கலாம்.

அதேமாதிரி சர்க்கார் தரிசு என்ற நஞ்சை புஞ்சைகளை அனுமதிபெற்று சாகுபடி செய்யலாம். ஜாரிகூடப்பெறலாம்.